# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my | Media_Selangor | SelangorTV selangortv.my | MediaSelangor

SELANGOR | SMART SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2055 / குரோதி வருடம் ஆடி மாதம் / ஜூலை 06/2024 / JULY 06/2024





# சுங்கை பூலோ ஆர்.ஆர்.ஐ. தமிழ்ப்பள்ளிக்கு - 6 ஏக்கர் நிலம்

**ஷா ஆலம்-**

மலேசியாவில் வரலாற்று சிறப்புமிக்க தமிழ்ப்பள்ளிகளில் ஒன்றாக விளங்கும் சுங்கை பூலோ ஆர். ஆர். ஐ. தமிழ்ப்பள்ளிக்கு நீண்ட காலப் போராட்டத்திற்குப் பின்னர் 6 ஏக்கர் நிலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது பள்ளி வீற்றிருக்கும் இடத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் ஜாலான் தாசேக் பெடு யு5/25 இடத்தில் இந்த ஆறு ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த பள்ளிக்கான நிலத் திறப்பு விழா மனித வளம் வறுமை ஒழிப்புத் துறைக்கான சிலாங்கூர் ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.பாப்பாராய்டு தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய வீ.பாப்பாராய்டு முந்தையத் தலைவர்களின் அரிய முயற்சியால் இந்த நிலம் கடந்த 2022ஆம் ஆண்டு ஆர்ஜிதம் செய்யப்பட்டு கடந்தாண்டு பெட்டாலிங் மாவட்ட நில அலுவலகத்தால் உறுதி செய்யப்பட்டது என்று சொன்னார்.

இந்த நிகழ்வின் வழி சுங்கை பூலோ ஆர். ஆர்.ஐ. தமிழ்ப்பள்ளி நிலம் தொடர்பான சர்ச்சைகளுக்கு முடிவுகட்ட விரும்புகிறோம். இதுதான் ஆர்.ஆர்.ஐ. தமிழ்ப்பள்ளிக்கான நிலம். இங்குதான் புதிய பள்ளி கட்டப்படும். இதில் எந்த மாற்றமும் இல்லை என அவர் உறுதிபடக் கூறினார்.

இப்பள்ளிக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு 5.94 ஏக்கராகும் எனக் குறிப்பிட்ட அவர், பள்ளிக்கு நிலத்தை அங்கீகரித்த மாநில, மத்திய அரசுகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

இந்த நிலத்தின் தற்போதைய மதிப்பு சுமார் 9 கோடி வெள்ளி என மதிப்பிப்படும் வேளையில் மூன்று ஏக்கர் நிலத்தில் பள்ளியைக் கட்டினாலும் எஞ்சிய இடத்தில் திடல் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்த இயலும் என குறிப்பிட்டார்.

இப்பள்ளி நிலத்தில் புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பது குறித்து ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சிந்திக்க வேண்டுமே தவிர நில சர்ச்சையில் தொடர்ந்து ஈடுபடக்கூடாது என அவர் அறிவுறுத்தினார்.

பெட்டாலிங் உத்தாமா மாவட்டத்திலுள்ள 5 தமிழ்ப்பள்ளிகளில் ஒன்றாக விளங்கும் சுங்கை பூலோ ஆர். ஆர். ஐ. தமிழ்ப்பள்ளியில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளுடன்கூடிய பொருத்தமான இடத்தில் இந்த நிலம் அமைந்துள்ளது.

# பிங்காஸ் உதவி திட்டத்திற்கான புதிய விண்ணப்ப நிபந்தனை அமல்

**ஷா ஆலம்-**

பிங்காஸ் உதவி திட்டத்திற்கான புதிய விண்ணப்ப நிபந்தனை அமல்படுத்தப்பட்டுள்ளது, அதாவது இனி RM5,000க்குக் குறைவான குடும்ப வருமானம் பெறும் நபர்களும் இந்த உதவி திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

முன்பு RM3,000க்கும் கீழ் மாத வருமானம் பெறும் குடும்பங்கள் மட்டுமே இந்த திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிபந்தனை தளர்வால் அதிகமான மக்கள் பலன் அடைவதை உறுதிசெய்ய முடியும்.

ஒரு வருடத்திற்கு RM3,600 வழங்கும் இந்த உதவி திட்டத்திற்கு இன்று முதல் அடுத்த ஆகஸ்ட் 15 வரை செலாங்கா செயலி அல்லது www.bingkaselangor.com என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என சமூக நலன் ஆட்சிக்குழு உறுப்பினர் கூறினார்.

"உணவு, மருந்து மற்றும் கல்வி உபகரணங்கள் போன்ற அடிப்படைத் தேவைகளை வாங்குவதற்கு 24 மாதங்களுக்கு பிங்காஸ் RM300 (1 மாதம்) உதவி வழங்குகிறது.

"இந்தத் திட்டமானது 30,000 பயனாளிகளை இலக்காகக் கொண்டு RM108 மில்லியன் ஒதுக்கீட்டை உள்ளடக்கியது.

"விண்ணப்பதாரர்கள் உள்ளூர் குடிமக்களாகவும் சிலாங்கூரில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களாகவும் இருக்க வேண்டும். கூடுதலாகச், சிலாங்கூரில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக வசிக்க வேண்டும் அல்லது இந்த மாநிலத்தில் பிறந்திருக்க வேண்டும்.

"இந்தத் திட்டம் நாட்டின் தீவிர வறுமையை தீர்க்க முடியும் மற்றும் வறுமையைக் குறைப்பதற்கான முதல் சிலாங்கூர் திட்டத்தின் (RS-1) மேக்ரோ குறிகாட்டிகளின் சாதனைக்கு மேலும் பங்களிக்க இயலும்" என்று அவர் கூறினார்.

இந்த உதவிக்கான தொகை பெறுநர்கள் எளிதாகச் செலவழிக்க "வேவ்பே இ-வாலட்" பயன்பாட்டின் மூலம் விநியோகிக்கப் படுகிறது.

# 17வது மாமன்னராக சுல்தான் இப்ராஹிம் முடிசூட்டு விழா

**கோலாலம்பூர்-**

சனிக்கிழமையன்று, மலேசியாவின் 17வது மாமன்னராக மாட்சிமை தாங்கிய சுல்தான் இப்ராஹிம் பதவியேற்கும் போது, விண்ணைத்தொடும் வாழ்க மாமன்னர் “டவுலாட் துவாங்கு” என்ற முழக்கங்கள் நாடு முழுவதும் எதிரொலிக்கும்.

எதிர்வரும் ஜூலை 20, 2024 அன்று, கூட்டரசு அரசியலமைப்பு படி மாமன்னரை அரச தலைவராகக் கொண்ட நாடாளுமன்ற ஜனநாயகத்தின் நடைமுறையை நாடு மீண்டும் உறுதிப்படுத்தும் நாளாக மலேசிய வரலாற்றில் பொறிக்கப்படும்.

புதிய மாமன்னருக்கு முடிசூட்டு விழா, செப்டம்பர் 2, 1957 அன்று முதன் முதலில் நடைபெற்றது. இது மத்திய அரசியலமைப்பின் 32(1) பிரிவின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை நடைபெறும் மலேசியாவின் மிக முக்கியமான தேசிய நிகழ்வாகும்.

மேலும், அரசியலமைப்பு விதி 32(1) பிரிவின் கீழ், மாமன்னர் என அழைக்கப்படும் கூட்டமைப்பின் உச்ச தலைவர் மற்ற கூட்டரசில் உள்ள அனைவரையும் விட உச்ச அதிகாரம் கொண்டவராக இருப்பார்.

சுருக்கமாக, (அகோங்) மாமன்னர் என்பவர் மலேசியாவின் மிக உயர்ந்த பதவியில் உள்ள அரச தலைவர் ஆவார். கூட்டாட்சி அரசியலமைப்பின் கீழ், நாட்டின் மூன்று முக்கிய பிரிவுகளான அமைச்சரவை, நாடாளுமன்றம் மற்றும் நீதித்துறை ஆகியவற்றில் அவரது மாட்சிமை, மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

ஆட்சியாளர்களின் மாநாட்டில் கூட்டாட்சி அரசியலமைப்பின் பிரிவு 32(2) மூலம் அதிகாரம் பெற்ற ஒன்பது மலாய் ஆட்சியாளர்களிடையே வாக்குகள் மற்றும் சுழற்சி முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 17 மலாய் ஆட்சியாளரை மலேசியா மன்னராக நியமித்துள்ளது.

நெகிரி செம்பிலானிலிருந்து சுழற்சி தொடங்கியது. அதைத் தொடர்ந்து சிலாங்கூர், பெர்லிஸ், திரங்கானு, கெடா, கிளந்தான், பகாங், ஜோகூர் மற்றும் பேராக் ஆகியவை இடம்பெறறன.

பாரம்பரியமான இஸ்தானா நெகாரா வில் உள்ள பாலாய் ரிங் சாரியில் இருந்து, 17வது மாமன்னரின் ஐந்தாண்டு ஆட்சி தொடங்கப்படும், அவ்விழாவைத் தொடர்ந்து, மாமன்னரின் பதவியேற்பை குறிக்கும் வகையில் தேசிய கொடி, அதிகாரப்பூர்வக் கொடியாக ஜோகூர் அரண்மனையில் 35 ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது முறையாக ஏற்றப்படும்.

மாமன்னர் சுல்தான் இப்ராஹிமின் தந்தையார், மறைந்த சுல்தான் இஸ்கண்டார் அவர்கள், எட்டாவது மாமன்னராக ஏப்ரல் 25, 1984 முதல் ஏப்ரல் 25, 1989 வரை ஆட்சி செய்தார். சுல்தான் இப்ராஹிமின் நியமனம் மலாய் ஆட்சியாளர்களின் இரண்டாவது சுழற்சியைக் குறிக்கிறது.

மேலும், நாட்டின் அரச தலைவரை நிறுவுவதில் தொடர்புடைய கிட்டத்தட்ட 67 ஆண்டு கால சம்பிரதாயங்கள் பழக்கவழக்கங்கள், சடங்கு நடவடிக்கைகள் ஆகியவை அனைத்தும் அப்படியே மாறாமல், மாற்றாமல் பயன்படுத்தப்படும்.

இஸ்தானா நெகாரா வின் கிராண்ட் சேம்பர்லைன் (டத்தோ பாடுகா மகாராஜா லீலா) டத்தோ அசுவான் எஃபெண்டி ஜைராகித்னைனியின் கூற்றுப்படி, முந்தைய அனைத்து பதவி ஏற்பு விழாவிலும் பயன்படுத்தப்பட்ட அனைத்து அரச சம்பிரதாயங்களும் 17வது மன்னர் பதவியேற்கும் போதும் பயன்படுத்தப்படும்.

“இது ஒரு முக்கியமான நிகழ்வு. நமது நாட்டின் கலாச்சார பாரம்பரியம் மற்றும் மரபுகளின் சிறப்பை நாங்கள் இன்னும் நிலைநிறுத்துகிறோம். முதல் மன்னர் பதவியேற்றதில்லிருந்து இந்த ரெ ஜாலியா பாதுகாக்கப்படுகிறது. இப்போது 17வது முறையாக மீண்டும் பயன்படுத்தப்படும் என்று அவர் பெர்னாமாவுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.





## சிலாங்கூரில் 60 இந்திர்களுக்கு சமூகத் தலைவர் பதவி

**ஷா ஆலம்-**

சிலாங்கூர் மாநிலத்தில் இந்திய சமூகத் தலைவர்களாக 60 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அடுத்த ஈராண்டுகளுக்கு இப்பதவியை வகித்து வருவர்.மக்களுக்கு குறிப்பாக இந்திய சமூகத்திற்கு சேவையை வழங்குவதில் இவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு துணையாக செயல்படுவர். புதிய தவணைக்கு இந்திய சமூகத் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விபரம் வருமாறு-

**கோம்பாக் மாவட்டம் -**
- எஸ். சிவராஜன் (குவாங் தொகுதி)
- அ. தேவசெல்வன் (ரவாங் தொகுதி)
- எம். குமார் (ரவாங் தொகுதி
- எஸ். சுரேந்திரன் (தாமான் டெம்ப்ளர் தொகுதி
- ஆர். வீரைய்யா (சுங்கை துவா தொகுதி
- ஆர். சுரேந்திரன் (உலு கிளாங் தொகுதி)

**உலு லங்காட் தொகுதி -**
- எஸ்.பானு (புக்கிட் அந்தாராபங்சா தொகுதி)
- ஆர்.விஜயன் (லெம்பா ஜெயா தொகுதி)
- சி. மோகன்ராஜ் (பாண்டான் இண்டா தொகுதி)
- கே. சரஸ்வதி தேவி (தெராத்தாய் தொகுதி)
- தே. சந்திரசேகரன் (டுசுன் துவா தொகுதி)
- கே. நடேசன் (செமினி தொகுதி)
- பி. தேன்மலர் (காஜாங் தொகுதி)
- அ.சிவக்குமார் (சுங்கை ராமால் தொகுதி)
- கிறிஸ்டி லுய்ஸ் பிரான்சிஸ் (பலாக்கோங் தொகுதி)

**சபாக் பெர்ணம் தொகுதி -**
- ஜி.மாறன் (சுங்கை ஆயர் தாவார் தொகுதி)
- கே. திலகா (சபாக் தொகுதி)
- கே. நடராஜன் (சுங்கை பாஞ்சாங் தொகுதி)
- வி.சேகர் (கிசிஞ்சான் தொகுதி)

**கோல லங்காட் தொகுதி -**
- ஜி. முருகன் (சிஜங்காங் தொகுதி)
- எம். அன்பழகன் (பந்திங் தொகுதி)
- இ.எலிசா சாம்சன் (மோரிப் தொகுதி)
- எம்.முரளி (தஞ்சோங் சிப்பாட் தொகுதி)

**கிள்ளான் மாவட்டம் -**
- எஸ்.வாசுதேவன் (மேரு தொகுதி)
- வி. கலையரசன் (செமெந்தா தொகுதி)
- எம். மகேஸ்வரன் (செலாட் கிளாங் தொகுதி)
- ஜெ. அருள்நேசன் (பண்டார் பாரு கிள்ளான் தொகுதி)
- எம். தீபா (போர்ட் கிள்ளான் தொகுதி)
- எம். மணிவண்ணன் (பண்டமாரான் தொகுதி)
- த. கணேசன் (பண்டமாரான் தொகுதி)
- பி. நரேந்திரன் (செந்தோசா தொகுதி)
- எம். தென்னரசு (செந்தோசா தொகுதி)
- எஸ். காளியம்மா (சுங்கை காண்டீஸ் தொகுதி)
- எம். நடராஜா (கோத்தா கெமுனிங் தொகுதி

**கோல சிலாங்கூர் மாவட்டம் -**
- எம்.ராஜகுமார் (சுங்கை பூரோங் தொகுதி)
- கே.பத்மநாதன் (பெர்மாத்தாங் தொகுதி)
- ஆ.கலைக்குமார் (புக்கிட் மெலாவத்தி தொகுதி)
- ஆ.ரவிச்சந்திரன் (ஈஜோக் தொகுதி)
- கே.மணிவண்ணன் (ஜெராம் தொகுதி)

**சிப்பாங் மாவட்டம் -**
- எஸ். நரேஷா குமார் (டெங்கில் தொகுதி)
- ஏ.சிவக்குமார் (சுங்கை பீலேக் தொகுதி)

**உலு சிலாங்கூர் மாவட்டம் -**
- எஸ். ஆனந்தன் (உலு பெர்ணம் தொகுதி)
- பி. தனகேஸ்வரி (கோல குபு பாரு தொகுதி)

**பெட்டாலிங் மாவட்டம் -**
- சி. குகனேஸ்வரன் ( ஸ்ரீ கெம்பாங்கான் தொகுதி)
- ஜே. சந்திரசீலன் ( ஸ்ரீ செர்டாங் தொகுதி)
- எஸ். கதிரவன் ( கின்ராரா தொகுதி)
- கே. சிவா ( கின்ராரா தொகுதி)
- நவமலர் ( சுபாங் ஜெயா தொகுதி)
- கே. சாமிநாதன் ( ஸ்ரீ செத்தியா தொகுதி
- பி. முத்துசாமி ( ஸ்ரீ செத்தியா தொகுதி)
- எஸ். அசோகன் ( தாமான் மேடான் தொகுதி)
- சி. ஹரிதாஸ் ( புக்கிட் காசிங் தொகுதி)
- என். நிர்மலா ( கம்போங் துங்கு தொகுதி)
- பரம்ஜிட் சிங் ஸ்வரன் சிங் ( பண்டார் உத்தாமா தொகுதி)
- தே.லோகநாதன் ( புக்கிட் லஞ்சான் தொகுதி)
- லிம் கியான் சோய் ( பாயா ஜெராஸ் தொகுதி
- எம்.தேவி (கோத்தா டாமன்சாரா தொகுதி
- ஏ.டாவுடர்ஸ் (கோத்தா அங்கிரிக் தொகுதி)
- பி.சதாசிவம் (பத்து தீகா தொகுதி)
- எம். கோபி (கோத்தா கெமுனிங் தொகுதி)

# சௌஜானா புத்ரா மேம்பாலம்

## போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டது

**ஷா ஆலம்-**

820 மீட்டர் நீளமுள்ள பண்டார் சௌஜானா புத்ரா மேம்பாலத்தை டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி திறந்து வைத்தார்.

இப்பாலம் RM70 மில்லியன் செலவில் கட்டப்பட்டது, நள்ளிரவு 12.01 மணிக்குத் அதிகாரப்பூர்வமாக திறந்து வைத்தவுடன் பயனர்களுக்கும் உடனடியாகத் திறக்கப்பட்டது.

அமிருடின் அவர்கள் கொடியசைத்து மேம்பாலம் வழியாகச் செல்லும் பயனர்களுக்குப் பெர்மோடாலன் நெகிரி சிலாங்கூர் பெர்ஹாட் (பிஎன்எஸ்பி) வழங்கிய 'குடீஸ் பேக்குகளை' விநியோகித்தார்.

மேலும், இதில் உள்கட்டமைப்பு ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹாஷிம், மாநில சட்டப் பேரவையின் (தொகுதி) சபாநாயகர் லாவ் வெங் சான், கோலா லங்காட் நகராண்மை கழகத் தலைவர் டத்தோ அமிருல் அஜிசான் அப்த் ரஹீம் மற்றும் PNSB யின் தலைமைச் செயல் அதிகாரி ராஜா அகமது ஷாரிர் இஸ்கந்தர் ராஜா சலீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதற்கிடையில், வட தென் மத்திய இணைப்பு விரைவுச்சாலை (ELITE) மற்றும் தெற்கு கிள்ளான் விரைவுச்சாலையை (SKVE) இணைக்கும் மேம்பாலம் திறக்கப்படுவதால் பண்டார் சௌஜானா புத்ராவில் போக்குவரத்து நெரிசல் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, குறிப்பாக போக்குவரத்து உச்ச நேரங்களில் ஆகும்.

இந்த மேம்பாலம் கட்டப் பட்டதால், பண்டார் சௌஜானா புத்ரா, ரிம்பாயூ தொடங்கி கோத்தா கெமுனிங் மற்றும் தஞ்சோங் டுவாபெலாஸ் பகுதிகளில் அமைத்துள்ள ஆயிரக்கணக்கான குடியிருப்புகள் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் மிக சிக்கலான போக்குவரத்து பிரச்சனைக்கு சிறந்த விடிவாகும் என்றார் மந்திரி புசார்.

"எனவே, இந்த மேம்பாலம் நெரிசலை விளக்க SKVE, ELITE, ரிம்பாயு மற்றும் பண்டார் சௌஜானா புத்ரா வரை வாழும் மக்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும்," என்று அவர் மேம்பாலத்தின் திறப்பு விழாவிற்குப் பிறகு சந்தித்தபோது கூறினார்.




## விமானப் பதிவை உட்படுத்த பணியை விரிவுபடுத்துவீர்

**ஷா ஆலம்-**

வருமானத்தைப் பெருக்குவதற்கு ஏதுவாக விமானங்களைப் பதிவு செய்வது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வதற்கு மலேசிய வான் போக்குவரத்து ஆணையத்தின் (சி.ஏ.ஏ.எம்.) பொறுப்புகள் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று கோம்பாக் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி வலியுறுத்தியுள்ளார்.

தற்போது அந்த நுட்ப ஒழுங்கு முறை அமைப்பின் அதிகாரம் வான் போக்குவரத்து சேவைகள் தொடர்பான உரிமங்களை வழங்கும் அளவுக்கு மட்டுமே உள்ளதோடு குறிப்பாக மலேசியாவில் பொருத்தப்படும் இயந்திரங்கள் அவற்றில் உள்ளடங்-கவில்லை என்று சிலாங்கூர் மந்திரி புசாருமான அவர் சொன்னார்.

ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், தொழில்முறை மேலாண்மையைப் பொறுத்தவரை விமானப் பதிவுக்கான மையமாகச் செயல்படுவதில் நாம் கண்டுள்ள தோல்வியை மறுஆய்வு செய்ய வேண்டும் என்பது எனது கருத்தாகும். கவனிக்கப்படாமல் போன இந்த விஷயம் லட்சக்கணக்கான வெள்ளி மதிப்பிலானது என்று மக்களவையில் அவர் தெரிவித்தார்.

2007ஆம் ஆண்டு சி.ஏ.ஏ.எம். சட்டத்தில் திருத்தம் செய்யும் நோக்கிலான இந்த மசோதா மாவ்கோம் எனப்படும் மலேசியா வான் போக்குவரத்து ஆணையத்தின் பணிகளை சி.ஏ.ஏ.எம். வசம் மாற்றுவதையும் பின்னர் அந்த ஆணையத்தைக் கலைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உள்நாட்டு உற்பத்தியில் சிலாங்கூரின் பங்களிப்பு 25.9 விழுக்காடாக அதிகரிப்பு

**ஷா ஆலம்-**

மலேசியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி.) அதிகபட்ச பங்களிப்பை அதாவது 25.9 விழுக்காட்டை கடந்தாண்டு வழங்கியதன் மூலம் தேசியப் பொருளாதாரத்தில் முக்கிய பங்களிப்பாளராக சிலாங்கூர் தொடர்ந்து திகழ்ந்து வருகிறது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 25.5 விழுக்காட்டு ஜி.டி.பி. பங்களிப்புடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை அதிகமாகும்.

2023ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அறிக்கையின் அடிப்படையில் புள்ளி விபரத் துறை இந்த தரவுகளை வெளியிட்டுள்ளது.

தேசிய அளவீடான 3.6 சதவீதத்தை விட அதிக வளர்ச்சியைப் பதிவு செய்த நான்கு மாநிலங்களில் ஒன்றாக சிலாங்கூர் விளங்குகிறது என்று இன்று வெளியிடப்பட்ட அறிக்கை தெரிவித்தது.

சிலாங்கூரின் பொருளாதாரம் 5.4 விழுக்காடாக வளர்ச்சி கண்டுள்ளது. இது மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அதிகமாகும். சிலாங்கூருக்கு அடுத்து பகாங் (5.2 சதவீதம்), ஜோகூர் (4.1 சதவீதம்) மற்றும் கோலாலம்பூர் (3.7 சதவீதம்) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## கே.டி.என்.கே. பங்களிப்பு அதிகரிப்பு

**ஷா ஆலம்-**

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (கே.டி.என்.கே.) சிலாங்கூர் மாநிலப் பங்களிப்பின் அதிகரிப்பு, கூட்டரசு அரசாங்கத்துடன் இசைந்து போகும் மாநில அரசு நிர்வாகத்தின் மீது வர்த்தக சமூகமும் மக்களும் கொண்டுள்ள நம்பிக்கையை புலப்படுத்துவதாக உள்ளது.

எனினும், அந்த சாதனையை எளிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது எனக் கூறிய மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, நீடித்த பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கான உந்து சக்தியாக இந்த அடைவு நிலையை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

மாவட்ட மற்றும் ஊராட்சி மன்ற நிலையில் பொருளாதார அடைவு நிலையை உயர்த்துவது மற்றும் பருவநிலை மாற்றப் பிரச்சனைக்கு நீடித்த தீர்வைக் காண்பது ஆகியவையும் இதில் அடங்கும் என அவர் குறிப்பிட்டார்.

இவை தவிர, சிலாங்கூர் வளர்ச்சியடைந்த மாநிலமாக மட்டுமின்றி வசிப்பதற்கு உகந்த இடமாகவும் திகழ்வதற்கு ஏதுவாக தரமான அடிப்படை வசதிகளும் முதிர்ந்த நகருக்கு இளமைத் தோற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார் அவர்.

தென்கிழக்காசியாவில் சிலாங்கூர் மாநிலம்தான் முதலீட்டுக்கான முதன்மை தேர்வு என்ற நம்பிக்கையை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் ஏற்படுத்த இந்த அணுகுமுறை பெரிதும் துணை புரியும் என்று அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டார்.

இந்த அடைவு நிலையை பதிவு செய்ததற்காக மாநில அரசு செயலாளர், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், மாவட்ட மற்றும் ஊராட்சி மன்ற பிரதிநிதிகள், முதலீட்டாளர்கள், அரசு ஊழியர்கள் உள்பட அனைத்துத் தரப்பினருக்கும் தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்தாண்டு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சிலாங்கூரின் பங்களிப்பு 25.9 விழுக்காடாக அதிகரித்துள்ளதாக மலேசியப் புள்ளிவிபரத் துறை கூறியிருந்தது. அதற்கு முந்தைய ஆண்டு இந்த எண்ணிக்கை 25.5 விழுக்காடாக இருந்ததாக அது குறிப்பிட்டிருந்தது.

# மெட்ரிகுலேஷனில் சேர அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு வாய்ப்பு



கோலாலம்பூர்- சிஜில் பிலஜாரான் மலேசியா (SPM) மதிப்பெண்கள் அதிகம் பெற்றவர்கள், இனம் பாராமல், மெட்ரிகுலேஷன் திட்டங்களில் சேருவதற்கான அரசாங்கத்தின் முடிவு, கல்வி அமைப்பில் உள்ள பதட்டங்களை குறைக்கும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிம் தெரிவித்தார்.

பிரதமர் துறையின் மாதாந்திர சபையில் பேசிய அவர், மெட்ரிகுலேஷன் கல்லூரி சேர்க்கைக்கான பூமிபுத்ரா ஒதுக்கீட்டை சுற்றியுள்ள சர்ச்சைகளை எடுத்துரைத்தார்.

"எனவே நாங்கள் (அமைச்சரவை) சமநிலையான அணுகுமுறையை எடுத்தோம். அவர்களும் நம் குடிமக்களே, நாம் அவர்களின் நலனையும் பராமரிக்க வேண்டும். எனவே, தகுதியின் யதார்த்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்," என்று அவர் மேற்கோள் காட்டினார்.

ஒவ்வொரு ஆண்டும் மெட்ரிகுலேஷன் கல்வி வாய்ப்புகள் அறிவிக்கப்படும் போது கல்வி அமைச்சகம் எதிர்கொள்ளும் "பதற்றத்தை" இந்த நடவடிக்கை குறைக்க வேண்டும் என்று பிரதமர் மேற்கோள் காட்டினார்.

இன்றைய சூடான அரசியல் சூழலில், இதுபோன்ற விஷயங்கள் சில நேரங்களில் இன மற்றும் சமூக பதட்டங்களுக்கு வழிவகுக்கும்.

மத்திய அரசமைப்புச் சட்டத்தின் 153வது பிரிவின்படி, மெட்ரிகுலேஷன் திட்டத்திற்கான பூமிபுத்ரா ஒதுக்கீடு மாறாமல் இருக்கும் என்று அன்வார் வலியுறுத்தினார்.

2025 ஆம் ஆண்டு முதல் SPM இல் 10A மற்றும் அதற்கு மேல் தேர்ச்சி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் அவர்களின் இனம் அல்லது பின்னணியைப் பொருட்படுத்தாமல் மெட்ரிகுலேஷன் கல்லூரிகளில் இடம் உத்தரவாதம் அளிக்கப்படும் என்று பிரதமர் நேற்று அறிவித்தார்.

2002 ஆம் ஆண்டில் பொதுப் பல்கலைக்கழக சேர்க்கைக்கான இன ஒதுக்கீடுகள் ரத்து செய்யப்பட்டாலும், மெட்ரிகுலேஷன் கல்லூரிகள் பூமிபுத்ராவிற்கு 90 சதவீத ஒதுக்கீட்டை இன்னும் பராமரிக்கின்றன, மேலும் சில அடித் தளப் படிப்புகள் பூமிபுத்ராவிற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன.

அன்வார் தகுதியின் முக்கியத்துவத்தை ஒப்புக்கொண்டார், ஆனால் விளிம்பு நிலை மற்றும் ஏழை சமூகங்கள் பின்தங்கிய நிலையில் இருப்பதையும் அவர்களின் வாய்ப்புகள் உறுதி செய்ய நீதி மற்றும் நியாயத்தின் அவசியத்தை வலியுறுத்தினார்.

பின்தங்கிய பின்னணியைச் சேர்ந்த மாணவர்கள், வளமான நகர்ப்புற பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுடன் சமமாக போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்ப்பது நியாயமற்றது என்று அன்வார் வாதிட்டார்.

நகர்ப்புற வசதிகளைக் கொண்ட மலாய்க் கல்லூரி கோலா கங்சார் அல்லது பினாங்கில் உள்ள எஸ்எம்ஜேகே சுங் லிங்குடன் போட்டியிடவோ அல்லது கிளந்தானில் உள்ள மானிக் உறை போன்ற இடங்களிலிருந்து வரும் மாணவர்கள் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்ப்பது நியாயமற்றது என்று அவர் கூறினார்.

சரவாக்கின் கபிட்டில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளுடன் எலைட் பள்ளிகள் போட்டியிடும் என்று எதிர்பார்ப்பது நியாயமற்றது என்றும் அவர் கூறினார்.

"எனவே நாம் தகுதியை ஆதரிக்கும் அதே வேளையில், நீதி மற்றும் நியாயத்தின் கொள்கைகளையும் நாம் நிலைநிறுத்த வேண்டும். நாம் தகுதியில் மட்டுமே கவனம் செலுத்தினால், விளிம்பு நிலை மற்றும் ஏழைகள் தொடர்ந்து பாதிக்கப்படுவார்கள். "கடுமையாகக் கடைப்பிடிக்காமல் நாம் தகுதியை நிலைநாட்ட முடியும்," என்று அவர் மேற்கோள் காட்டினார்.

# இந்திய சமூகத்தை ஒருபோதும் புறக்கணித்ததில்லை



நிபோங் திபால்- ஒற்றுமை அரசாங்கம் இந்திய சமூகத்தை ஒருபோதும் புறக்கணித்ததில்லை. மாறாக, அச்சமூகத்தின் நலன் காக்க பல்வேறு திட்டங்களை அது முன்னெடுத்துள்ளது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

உதாரணத்திற்கு சிலாங்கூர் மாநிலத்தில் தீபாவளி பெருநாள் நிதியுதவி உள்பட பல்வேறு திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளதோடு ஆலய உடைப்பு விவகாரத்திற்கும் தீர்வு காணப்பட்டுள்ளது என்று அவர் சொன்னார்.

கெஅடிலான் கட்சி தலைமையிலான ஒற்றுமை அரசு, பின்னணியைப் பாராமல் அனைத்து மக்களுக்கும் தொடர்ந்து உதவிகளை வழங்கி வருகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

முன்பு பத்து கேவ்ஸ் என அழைக்கப்பட்ட சுங்கை துவா சட்டமன்ற உறுப்பினராகக் கடந்த 2008ஆம் ஆண்டு முதல் நான் இருந்து வருகிறேன். ஒவ்வோராண்டு தைப்பூசத்தின் போதும் பத்து லட்சத்திற்கும் மேற்பட்டோர் எந்த இடையூறுமின்றி பத்து மலையில் ஒன்று கூடி தங்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்றி வருகின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

சுங்கை பாக்கப் தொகுதி இடைத் தேர்தல் பிரசாரத்தின் ஒரு பகுதியாக ஜாவி, செப்பா தோட்டத்தில் உள்ள இந்தியர்களுடன் தேநீர் விருந்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது சிலாங்கூர் மாநில பக்கத்தான் ஹராப்பான் தலைவருமான அவர் இவ்வாறு சொன்னார்.

இந்திய சமூகத்தின் நலன் தொடர்ந்து காக்கப்படுவதை உறுதி செய்வதற்கு ஏதுவாக இந்த இடைத் தேர்தலில் ஒற்றுமை அரசின் வேட்பாளர் டாக்டர் ஜோஹாரி அரிபினுக்கு வாக்களிக்கும்படி இந்திய சமூகத்தை அவர் கேட்டுக் கொண்டார்.

வழிபாட்டுத் தலங்கள், தமிழ்ப்பள்ளிகள் பாதுகாக்கப்-படுவதற்கும் பெருநாளுக்கான தேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்கும் ஒற்றுமை அரசின் வேட்பாளர் வெற்றி பெறுவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கடந்த ஜூலை மாதம் 6ம் தேதி நடைபெற்ற சுங்கை பாக்காப் இடைத்தேர்தலில் ஒற்றுமை அரசின் வேட்பாளர் ஜோஹாரி அரிபின் மற்றும் பெரிக்காத்தான் நேஷனல் வேட்பாளர் அபிடின் இஸ்மாயில் இடையே நடந்த நேரடி போட்டியில் அபிடின் இஸ்மாயில் 14 489 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

# இந்திய தொழில்முனைவோருக்கு RM32.55 மில்லியன் கடனுதவி



கோலாலம்பூர்- வணிகத் துறையில் அதிகமான இந்தியர்களை ஈடுபடச் செய்வதிலும், அவர்களின் வியாபாரத்தை அடுத்த நிலைக்கு உயர்த்துவதிலும் தீவிர முனைப்புக் காட்டி வந்த தொழில்முனைவோர் மேம்பாடு கூட்டுறவுத் துறை துணையமைச்சர் டத்தோ ரமணன் ராமகிருஷ்ணன், ஐந்தே மாதக் காலத்தில் 2,225 தொழில் முனைவோருக்கு RM32.55 மில்லியன் கடனுதவியை வழங்கி அதிரடி நிகழ்த்தியுள்ளார்.

தொழில்முனைவோர் மேம்பாட்டு கூட்டுறவுத் துறை அமைச்சின் கண்காணிப்பில் உள்ள தெக்குன், அமானா இக்தியார், பேங்க் ராக்யாட் ஆகிய நிதியகங்கள் வழி, இந்திய தொழில்முனைவோர்களுக்குப் பிரத்தியேக வியாபாரக் கடனுதவிகளை ஒதுக்கீடு செய்வதில் டத்தோ ரமணன் வரலாற்று படைத்துள்ளார்.

'தெக்குன் ஸ்புமி' நிதியகப் பிரிவின் கீழ், புதிதாய் 'தெக்குன் ஸ்புமி கோஸ் பிக்' எனும் இன்னொரு வியாபாரக் கடனுதவி களத்தை உருவாக்கி, அதன் கீழ் 30 மில்லியன் ரிங்கிட் நிதி ஒதுக்கீட்டை அவர் அறிவித்திருந்தார்.

தொடர்ந்து, பெண் தொழில்-முனைவோர்க்கு அமானா இக்தியார் மலேசியா நிதியகத்தின் கீழ், இந்தியப் பெண்களுக்காகப் "பெண்" (P.E.N.N) எனும் புதிய வியாபாரக் கடனுதவியை அறிமுகம் செய்து, கூடுதலாக 50 மில்லியன் ரிங்கிட் நிதியையும் அவர் அறிவித்திருந்தார்.

அதோடு நில்லாமல், பேங்க் ராக்யாட் வரலாற்றில் முதல் முறையாக இந்திய தொழில்முனைவோர்களுக்காகப் 'பிரிஃப்-ஐ' (BRIEFF-I) எனும் புதிய கடனுதவி திட்டத்தை அறிமுகம் செய்து, பிரத்தியேகமாக 50 மில்லியன் ரிங்கிட் நிதியையும் அவர் ஒதுக்கீடு செய்திருந்தார்.

இந்நிலையில், ஆண்டு தொடக்கத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பிரச்சாரங்கள் – விளக்கக்கூட்டங்கள் வழி, கடந்த 31 மே 2024 வரை, தெக்குன் ஸ்புமி நிதியகத்தின் வழி 822 இந்தியத் தொழில்முனைவோர்களுக்கு 17.355 மில்லியன் ரிங்கிட் பகிரப்பட்டுள்ளதாகவும், 'தெக்குன் ஸ்புமி கோஸ் பிக்' எனும் புதிய கடனுதவித் திட்டத்தின் கீழ் 13 பேருக்கு 6 லட்சத்து 30 ஆயிரம் ரிங்கிட் வழங்கப்பட்டுள்ளதாகவும் டத்தோ ரமணன் ராமகிருஷ்ணன் அறிவித்தார்.

மக்களவை கூட்டத் தொடரில், இந்திய தொழில்முனைவோர்களுக்கான மொத்த ஒதுக்கீடு குறித்து சுங்கை சிப்புட் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கேசவனின் கேள்விக்கு டத்தோ ரமணன் ராமகிருஷ்ணன் எழுத்துப் பூர்வமாகப் பதிலளித்தார்.

தெக்குன் நிதியகத்தின் 'ஸ்புமி' பிரிவின் வழி, கடந்த 2008ஆம் ஆண்டு முதல் 31 மே 2024 வரை 29,136 இந்திய தொழில்முனை-வோர்களுக்கு 457.7 மில்லியன் ரிங்கிட் கடனுதவி வழங்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

புதிதாய் அறிமுகம் கண்ட ஏ.ஐ.எம் – பெண் திட்டத்தின் வழி, இதுவரை 1,347 இந்தியப் பெண் தொழில்முனைவோர்களுக்கு RM10.85 மில்லியன் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும், பேங்க் ராக்யாட் பிரிஃப்-ஐ திட்டத்தின் கீழ் 43 பேருக்கு 3.8 மில்லியன் கடனுதவி அங்கீகரிக்க-பட்டுள்ளதாகவும் டத்தோ ரமணன் தமது பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பிரிஃப்-ஐ கடனுதவித் திட்டத்திற்கு அதிக வரவேற்பு கிடைத்துள்ளதாகவும் இதுவரை 140 இந்திய தொழில்முனைவோர்கள் கடனுதவிக்கு விண்ணப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



# மூல நீர் ஆதாரத் திட்டம் அக்டோபர் மாதம் செயல்படும்

**ஷா ஆலம்-**

மூல நீர் ஆதாரத் திட்டம் (எஸ்.ஜே.ஏ.எம்.) வரும் அக்டோபர் மாதம் முழுமையாகச் செயல்படத் தொடங்கும் என சிலாங்கூர் அரசு உறுதியளித்துள்ளது. இந்த திட்டம் பல மாதங்கள் தாமதமடைந்த நிலையில் குத்தகையாளருக்கு இனியும் கால அவகாசம் வழங்கப்படாது என அது திட்டவட்டமாகத் தெரிவித்தது.

நான்கு கட்டங்களை உள்ளடக்கிய இந்த திட்டத்தின் கட்டுமானப் பணிகள் தற்போது 89.54 விழுக்காடு பூர்த்தியடைந்துள்ளதாகப் பொது வசதி மற்றும் விவசாயத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹஷிம் கூறினார்.

இந்த திட்டம் தற்போதைய நிலவரப்படி 91.16 விழுக்காடு பூர்த்தியடைய ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த நிலையில் 1.62 விழுக்காடு தாமதமடைந்துள்ளது என்று அவர் சொன்னார்.

இந்த திட்டம் எதிர்வரும் செப்டம்பர் மாதவாக்கில் முற்றுப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. சோதனை உள்ளிட்ட பணிகள் இரு வாரங்களுக்கு மேற்கொள்ளப்பட்டு எதிர்வரும் அக்டோபர் மாதம் அது முழுமையாகச் செயல்படும் என அவர் மாநில சட்டமன்றத்தில் கூறினார்.

எஸ்.ஜே.ஏ.எம். திட்டத்தின் ஆகக்கடைசி மேம்பாடு குறித்து சுபாங் ஜெயா உறுப்பினர் மிஷல் இங் மேய் ஸீ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது பார்வையில் படாமல் போன குடிநீர்க் குழாய் ஒன்றை பணியாளர்கள் கடந்த மே மாதம் 16ஆம் தேதி கண்டு பிடித்ததைத் தொடர்ந்து அந்த திட்டத்தின் டி பிரிவுப் பகுதியில் எதிர்பாராத தாமதம் ஏற்பட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

அந்த திட்டத்தை கடந்த ஜூன் மாதம் 30ஆம் தேதிக்குள் முடிக்க ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், டி பிரிவில் உள்ள ஆயர் சிலாங்கூர் நிறுவனத்திற்குச் சொந்தமான குழாய் அகற்றும் பணியினால் கூடுதல் கால தாமதம் ஏற்பட்டது என்றார் அவர்.

எனினும், சம்பந்தப்பட்ட குத்தகையாளருக்கு இனியும் கால அவகாசம் வழங்கப்படாது என அவர் சொன்னார்.

குத்தகையாளரின் கவனக் குறைவு காரணமாக ஏற்பட்ட தவறு என்பதால் இத்திட்டத்தை மேற்கொள்ள இனியும் கூடுதல் கால அவகாசம் வழங்கப்படாது என மாநில அரசு சம்பந்தப்பட்ட குத்தகையாளரிடம் தெரிவித்து விட்டது என்று அவர் மேலும் கூறினார்.

# RM100.38 பில்லியன் அந்நிய முதலீட்டின் மதிப்பு பதிவு

**ஷா ஆலம்-**

2008 முதல் இந்த ஆண்டு மார்ச் வரையிலான காலகட்டத்தில் உற்பத்தித் துறையின் மூலம் RM100.38 பில்லியன் அந்நிய முதலீட்டின் மதிப்பைப் சிலாங்கூர் பதிவு செய்துள்ளது.

சம்பந்தப்பட்ட முதலீட்டின் மதிப்பு, குறிப்பிட்ட காலகட்டத்தில் 1,955 திட்டங்களை உள்ளடக்கிய 169,775 வேலை வாய்ப்புகளை வழங்கியது என மலேசிய முதலீட்டு மேம்பாட்டு வாரியம் (MIDA) அறிக்கையின் அடிப்படையில் முதலீட்டு ஆட்சிக்குழு உறுப்பினர் கூறினார்.

"தற்போது இன்வெஸ்ட் சிலாங்கூர் பெர்ஹாட் 63 வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களைக் கண்காணித்து வருகிறது. அவை குத்தகை அல்லது கொள்முதல் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன் தற்போது இறுதி கட்டத்தில் உள்ளன.

"திட்டங்கள் தளத்தைப் பார்வையிடும் கட்டத்திற்குச் சென்றுள்ளன. மொத்த முதலீட்டுத் திறன் சுமார் RM8 பில்லியன் ஆகும்" என்று இன்று சிலாங்கூர் மாநில சட்டமன்றக் கூட்டத்தில் இங் சீ ஹான் கூறினார்.

கடந்த ஆண்டு சிலாங்கூரின் பதிவு செய்யப்பட்ட RM55.3 பில்லியன் முதலீட்டை கடந்த மார்ச் மாதம், மீடா அறிவித்தது. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கான RM45 பில்லியனைத் தாண்டியது.

2022இல் RM12.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில், கடந்த ஆண்டு RM19.3 பில்லியனாக உற்பத்தித் திட்டங்கள் அல்லது உற்பத்தித் துறை அதிகரித்துள்ளதாகவும் நிறுவனங்களின் தரவுகள் காட்டுகின்றன.

மேம்பட்ட பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து இந்த ஆண்டின் முதலீட்டு மதிப்பாக RM50 பில்லியனை டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கொண்டுள்ளார்.

# வளர்ச்சி மையமாக விளங்கும் பூச்சோங்
## அனைத்து வசதிகளையும் கொண்டிருக்கும்



**சுபாங் ஜெயா-**

கிள்ளான் பள்ளத்தாக்கு (லெம்பா கிள்ளான் ராயா) வளர்ச்சியின் மையமாக விளங்கும் பூச்சோங்கின் மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் கொண்டிருப்பதன் மூலம் வேகமாக மேம்பாடு அடையும்.

மேலும், வளர்ச்சியும் நிலைத் தன்மையுடன் கைகோர்த்துச் செல்கிறது, அதாவது சுற்றுச்சூழல் அழகு உட்பட, நல்வாழ்வு மற்றும் வாழ்க்கைக்கான சமநிலைக்கு உத்தரவாதம் அளிக்கிறது என முதலீட்டு ஆட்சிக்குழு உறுப்பினர் இங் சீ ஹான் கூறினார்.

"லெம்பா கிள்ளான் ராயாவில் வளர்ச்சியில் முக்கிய மையமாகப் பூச்சோங் இருக்கும். அதை தொடர்ந்து மேம்படுத்துவதற்கும் அங்குள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகளை தொடர்ந்து மேம்படுத்துவது ஒரு சவாலாக உள்ளது.

மேலும், 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட, மக்கள் நலனுக்காக பல மாற்றங்களைச் செய்துள்ளோம். போக்குவரத்து வலையமைப்பை மேம்படுத்தி வருகிறோம், எதிர்காலத்தில் மேலும் பல வசதிகளை கொண்டு வருவோம், என்றார்.

"இந்த வளாகம் பாதுகாப்பான ஃபுட்சல், கூடைப்பந்து மற்றும் (ஜேகிங்) நடைபயிற்சி டிராக்குடன் முழுமையாக அமைந்திருக்கும். இந்த வசதிகள் அனைத்தும் இளம் தலைமுறையினர், இங்கு ஒரு குடும்பத்தை உருவாக்க உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்," என்று அவர் கூறினார்.

இந்த ஆண்டு பட்ஜெட்டில் RM2 மில்லியன் ஒதுக்கீட்டில் லெம்பா கிள்ளான் ராயாவில் பெட்டாலிங் ஜெயா, சுபாங் ஜெயா, ஷா ஆலம் மற்றும் கிள்ளான் ஆகியவை இணைக்கப்படும்.

இது தென்கிழக்கு ஆசியாவின் முக்கிய பொருளாதார தளமாக மாறும் திறனைக் கொண்டுள்ளது மற்றும் அதை முழுமையாக கட்டமைத்தால் ஆசியாவின் ஐந்து முக்கிய பள்ளத்தாக்குகளில் ஒன்றாக உருவாக்க முடியும் என்றார்.

இதற்கிடையில். உள்ளூர் சமூகத்தின் கலை மற்றும் கலாச்சாரத்தை முன்னிலைப்படுத்தும் நிகழ்ச்சி கடந்த வாரம் நடைபெற்றது.

"இந்த நிகழ்ச்சி பூச்சோங்கில் உள்ள கலை மற்றும் கலாச்சார வாழ்க்கையை எடுத்துக் காட்டுகிறது மற்றும் பல்வேறு இனங்களை ஒன்றிணைக்கும் ஒரு தளமாகச் செயல்படுகிறது. மேலும், இயற்கையின் அழகைப் பாராட்டவும், பொழுதுபோக்கு மற்றும் கலை நடவடிக்கைகளுக்கு இடையில் சமநிலையைப் பாராட்டவும் குடியிருப்பாளர்களை ஊக்குவிக்கிறது," என்று அவர் கூறினார்.

# சிப்ஸ் தென்கிழக்கு ஆசியா பொருளாதார மேம்பாட்டுக்கான தளம்

**பெட்டாலிங் ஜெயா-**

சிலாங்கூர் சர்வதேச வணிக உச்சி மாநாட்டின் (SIBS) அமைப்பு பொருளாதார உயர்வுக்கு சரியான தளம், தென்கிழக்கு ஆசியா ரீதியிலும் முதலீட்டு நடவடிக்கைகள் வழி பொருளாதாரத்தை உயர் நிலைக்கு உயர்த்தும் திறன் கொண்டவை.

ஒரு முழுமையான வணிக கட்டமைப்பு வழங்குவதன் மூலம், மலேசியாவை மட்டுமின்றி தென்கிழக்கு ஆசியாவையே ஒரு வளர்ந்த கண்டமாக மாற்றுவதற்கான ஒரு தளமாகும் என டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கருதுகிறார்.

"SIBS மலேசியாவை மட்டுமல்ல, தென்கிழக்கு ஆசியாவிலும் கவனம் செலுத்துகிறது. சரியான படிகள் மற்றும் உத்திகளின் மூலம் தென்கிழக்கு ஆசியாவின் பொருளாதாரத்தை உயர்த்தி, மிகவும் முன்னேறிய கண்டங்களில் ஒன்றாக மாற்ற உதவும் என்று நான் நம்புகிறேன்.

"இதன் ஆக்ககரமான மேம்பாட்டின் வழி அனைவருக்கும் பயனளிக்கும் ஒரு வலையமைப்பை உருவாக்க முடியும், இது வெற்றி அடையும் என சிலாங்கூர் அரசாங்கம் நம்புகிறது," என்று அவர் SIBS இன் துவக்கத்துடன் இணைந்து ஒரு வீடியோ பதிவில் கூறினார்.

முதலீடு, வர்த்தகம் மற்றும் சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹனால் தொடங்கப்பட்டது, SIBS இந்த ஆண்டு இரண்டு முறை மொத்தம் RM7 பில்லியன் முதலீட்டை இலக்காகக் கொண்டு கோலாலம்பூர் கன்வென்ஷன் சென்டரில் (KLCC) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதல் தொடர் அடுத்த ஜூலை 25 முதல் 27 வரை சிலாங்கூர் தொழில் பூங்கா கண்காட்சி மற்றும் சிலாங்கூர் ஆசியான் வணிக மாநாடு ஆகியவற்றை மையமாகக் கொண்டது.

இரண்டாவது தொடர் அக்டோபர் 16 முதல் 19 வரை சிலாங்கூர் இன்டர்நேஷனல் எக்ஸ்போ மற்றும் சிலாங்கூர் இன்டர்நேஷனல் எக்ஸ்போ, ஸ்மார்ட் சிட்டி மற்றும் சிலாங்கூர் டிஜிட்டல் எகானமி ஆகியவற்றை உள்ளடக்கியது.

சர்வதேச மாநாடு 80 நாடுகளில் இருந்து 60,000 வருகையாளர்களை ஈர்ப்பதுடன், 1,300க்கும் மேற்பட்ட கண்காட்சி அரங்குகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# செராண்டாவை வாகன உற்பத்தி மையமாக மாற்ற மாநில அரசு உத்தேசம்



**ஷா ஆலம்,-**
செராண்டா அடைந்துள்ள வளர்ச்சியை தொடர்ந்து அவ்விடத்தை பொருள் பட்டுவாடா போக்குவரத்து வாகன உற்பத்தி மையமாக மாற்ற மாநில அரசு உத்தேசித்துள்ளது.

"UMW டெவலப்மென்ட் Sdn Bhd" நிறுவனம் செராண்டாவில் உயர் மதிப்பு தொழில்துறை, நகரத்தைத் திறந்ததன் மூலம் அவ்விடம் பல்வேறு முதலீடுகளை ஈர்த்து வருகிறது என்றும் முதலீட்டு ஆட்சிக்குழு உறுப்பினர் கூறினார்.

"பெரோடுவா, டான் சோங் மோட்டார்ஸ் மற்றும் யுஎம்டபிள்யூ டெவலப்மென்ட் போன்ற தானியங்கி வாகன விற்பனை தொழிற்சாலைகள் திறக்கப்பட்டு செராண்டாவில் முதலீட்டு நடவடிக்கைகளை அதிகரித்தது.

"UMW தலைமையகத்தை ஷா ஆலமிலிருந்து செராண்டாவுக்கு மாற்றியதன் மூலம் மலேசியா முதலீட்டை இந்தப் பகுதிக்கு ஈர்த்துள்ளது" என்று மாநில சட்டமன்ற அமர்வில் இங் ஸீ ஹான் கூறினார்.

கிழக்கு கடற்கரை ரயில் பாதையின் (ECRL) வளர்ச்சியானது நாட்டின் பொருள் பட்டுவாடா தளவாட மையமாகச் செரெண்டாவை உருவாக்குவதற்கான புதிய வாய்ப்புகளைத் திறக்கிறது என்றும் அவர் கூறினார்.

"கிழக்கு, தெற்கு மற்றும் வடக்கு கடற்கரையிலிருந்து தண்டவாளங்கள் சந்திக்கும் இடமாகப் பண்டார் செரெண்டா நிலையம் இருக்கும். செரெண்டா ஒரு விநியோக மற்றும் தளவாட மையமாக மாறும் சாத்தியமும் உள்ளது.

"முதலீட்டாளர்கள் குவாந்தான் துறைமுகத்தைப் பயன்படுத்தி கிழக்குப் பகுதிக்குப் பொருட்களை விநியோகிக்க கிழக்கு கடற்கரை ரயில் பாதையைப் பயன்படுத்தலாம். அதே நேரத்தில் கிழக்கிலிருந்து பொருட்களை போர்ட் கிள்ளான் மற்றும் பினாங்கிற்குப் பண்டார் செராண்டா நிலையம் வழியாக அனுப்ப முடியும்.

"இந்த நிலையம் பயணிகள் நிலையமாகவும் செயல்படும்," என்று அவர் கூறினார்.

# பதின்ம வயதினர் மத்தியில் மனநல பாதிப்பு இரு மடங்கு அதிகரிப்பு



**ஷா ஆலம்-**
சிறுவர்கள் மற்றும் பதின்ம வயதினர் மத்தியில் மனநலப் பாதிப்பு 2019 ஆம் ஆண்டைக் காட்டிலும் இரு மடங்கு அதிகரித்து கடந்தாண்டு 922,318 சம்பவங்களாகப் பதிவானதாக சுகாதார அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஜூல்கிப்ளி அகமது கூறினார்.

ஐந்து முதல் பதினைந்து வயதுக்குட்டவர்கள் இந்த பாதிப்பை எதிநோக்கியவர்களாக உள்ளதை தேசிய நோய் பாதிப்பு மருத்துவ ஆய்வு காட்டுவதாக அவர் சொன்னார்.

மலேசியா மடாணி கோட்பாட்டிற்கு ஏற்ப, சிறுவர்கள் மற்றும் பதின்ம வயதினர் மத்தியில் காணப்படும் மனநலப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் பொறுப்பை அரசு துறைகளையும் தாண்டி அனைத்துத் தரப்பினரும் ஏற்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

மக்களையில் தஞ்சோங் காராங் உறுப்பினர் டத்தோ டாக்டர் ஜூல்கிப்ளி ஹனாபி எழுப்பிய கேள்விக்கு வழங்கிய எழுத்துப்பூர்வ பதிலில் அமைச்சர் இவ்வாறு கூறினார்.


சிறார் மற்றும் பதின்ம வயதினர் மத்தியில் காணப்படும் மனநலப் பிரச்சனை தொடர்பான தரவுகள் மற்றும் அப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான அமைச்சின் நடவடிக்கை குறித்து டாக்டர் ஜூல்கிப்ளியிடம் கேள்வி எழுப்பி இருந்தார்.

இத்தகைய மனநலப் பிரச்சனைகளைக் கையாள்வதற்காக சுகாதார அமைச்சு கல்வியமைச்சுடன் இணைந்து நாடு முழுவதும் உள்ள 2,456 இடைநிலைப்பள்ளிகள் மற்றும் 7,776 ஆரம்பப் பள்ளிகளில் 'மிண்டா சேஹாட் செக்கோலா' எனும் திட்டத்தை அமல்படுத்தியுள்ளதாக அமைச்சர் ஜூல்கிப்ளி தெரிவித்தார்.

இது தவிர, நாட்டிலுள்ள 1,088 சுகாதார கிளினிக்குகள், 63 மருத்துவமனைகள் மற்றும் 37 சமூக மனநல மையங்களில் மனநலம் தொடர்பான சேவைகளை சுகாதார அமைச்சு வழங்கி வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது நாடு முழுவதும் உள்ள சுகாதார அமைச்சின் மருத்துவமனைகளில் 18 சிறார் மனநல மருத்துவ நிபுணர்கள் உள்ளதாகக் கூறிய அவர், வரும் 2027ஆம் ஆண்டுவாக்கில் அந்த எண்ணிக்கையை 30 பேராக உயர்த்த அமைச்சு திட்டமிட்டுள்ளது என்றார்.

# 5,125 மலேசிய மாணவர்களுக்கு திவேட் பயிற்சி வாய்ப்பு



**ஷா ஆலம்-**
திவேட் எனப்படும் தொழில்நுட்ப மற்றும்தொழில்திறன் கல்வியை மேற்கொள்ள மலேசியாவைச் சேர்ந்த 5,125 மாணவர்களுக்கு 114 சீன கல்விக்கூடங்கள் இடங்களை வழங்குகின்றன.

துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் அகமது ஜாஹிட் ஹமிடி அண்மையில் சீனாவுக்கு மேற்கொண்ட பயணத்தின் பலனாக இந்த வாய்ப்பு கிட்டியதாக துணை வெளியுறவு அமைச்சர் டத்தோ முகமது அலாமின் கூறினார்.

தொழில்திறன் மற்றும் நிபுணத்துவத் துறை சார்ந்த கல்வி மற்றும் பயற்சியில் மிகப்பெரிய ஸ்தாபனமாக விளங்கும் ஹாங்காங் தொழில்திறன் பயிற்சி மன்றமும் அவற்றில் ஒன்றாகும் என்று அவர் தெரிவித்தார்.

மக்களவையில் இன்று துணைப் பிரதமர் சீனாவுக்கு மேற்கொண்ட பயணத்தின் மூலம் கிட்டிய பலன்கள் குறித்து செராஸ் உறுப்பினர் தெரேசா கோக் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

மலேசியா-சீனா உறவுகளின் 50ஆம் ஆண்டு நிறைவையொட்டி துணைப் பிரதமர் மேற்கொண்ட அந்த பயணத்தின் போது உலக ஹலால் தொழில்துறையின் அபரிமித வளர்ச்சி குறித்தும் விவாதிக்கப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

சீனப் பிரதமர் லீ கியாங்குடன் துணைப் பிரதமர் நடத்திய சந்திப்பின் போது ஹலால் தொழில்துறையில் மலேசியாவின் முன்னெடுப்புகளை இரு தலைவர்களும் வரவேற்றதோடு சான்றிதழ், சேவை மற்றும் ஹலால்

மேலும், இரு நாடுகளும் சம்பந்தப்பட்ட வட்டார மற்றும் அனைத்துலக விவகாரங்கள் குறித்தும் உயர் தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, இலக்கவியல் பொருளாதாரம், செமிகண்டக்டர் துறைகள் குறித்தும் இரு தலைவர்களும் கருத்து பரிமாற்றம் செய்து கொண்டனர் என்று அவர் சொன்னார்.

# பெற்றோர்களுக்கான நெகிழ்வான வேலை ஏற்பாடு

**ஷா ஆலம்-**
சிறந்த வேலை-வாழ்க்கை இடையே சமநிலையை உறுதி செய்வதற்காக பெற்றோருக்கு நெகிழ்வான பணி முறை ஏற்பாடுகளை செயல்படுத்துவது குறித்து சிலாங்கூர் ஆய்வு செய்து வருகிறது என்று பெண்கள் அதிகாரம் மற்றும் நலனுக்கான மாநில செயற்குழு உறுப்பினர் அன்பால் சாரி கூறினார்.

மாநில துணை நிறுவனமான வனிதா பெர்டாயா சிலாங்கூர் (WBS) சிலாங்கூரில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான மாதிரிகளை கண்டறிந்து ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டுள்ளது.

"WBS ஆனது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்கள் இருவரும் குடும்பம் மற்றும் தொழிலுக்கு இடையே சிறந்த சமநிலையை அடைய உதவும் நெகிழ்வான பணி ஏற்பாட்டு மாதிரிகளை ஆராய்கிறது," என்று அவர் தனது முதல் சிலாங்கூர் திட்டத்திற்கான (RS-1) நடுப்பகுதி மதிப்பாய்வின் உரையில் கூறினார்.

இது நடைமுறைப்படுத்தப்பட்டால், தொழில் வளர்ச்சியில் சமரசம் செய்யாமல் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உகந்த பணிச்சூழலை வளர்ப்பது என்ற மாநில அரசின் நோக்கத்திற்கு ஏற்ப, தற்போது பணிபுரியும் பெற்றோர்கள் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ள முடியும். இருப்பினும், முன்மொழிவு தொடர்பான கூடுதல் விவரங்களை அன்பால் வழங்கவில்லை.

அவர் தனது உரையில், பெற்றோர்களை இலக்காகக் கொண்ட மற்றொரு திட்டத்தையும் அறிவித்தார், அவர்களின் அறிவை அதிகரிக்கவும், டிஜிட்டல் சகாப்தத்தின் சவால்களைக் கையாள அவர்களுக்கு அதிகாரம் அளிக்கவும், குறிப்பாக குழந்தைகளைப் பற்றியது.

டிஜிட்டல் பிரேன்டிங் திட்டம் என்று அழைக்கப்படும், 10 அமர்வுகளை உள்ளடக்கிய இந்த முயற்சி சிலாங்கூரில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 300 பங்கேற்பாளர்களை இலக்காகக் கொண்டு நடத்தப்படும்.

தனித்தனியாக, மூத்த குடிமக்களிடையே உற்பத்தி ஈடுபாடுகளை ஊக்குவிப்பதற்காக சிலாங்கூர் பராமரிப்பு பொருளாதாரக் கொள்கையின் கீழ் மாநில அரசாங்கம் தற்போது ஒரு செயல் திட்டத்தை உருவாக்கி வருவதாகவும், மேலும் அவர்களுக்கு சாத்தியமான வருமான வழிகளை வழங்குவதாகவும் அன்ஃபால் கூறினார்.

# சிலாங்கூர் ரயில் பாதை பொருளாதார திறனை மேம்படுத்தும்



**ஷா ஆலம்-**
சிலாங்கூர் ரயில் பாதையானது சிலாங்கூரின் வடக்கில் உள்ள பல சிறிய நகரங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த வல்லது என்று டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

சிலாங்கூர் ரயில் பாதை காப்பார், ஜெராம், கோலா சிலாங்கூர், சிகிஞ்சான் மற்றும் சபாக் பெர்ணம் ஆகியவற்றை மேம்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது. மேலும் பேராக் எல்லைப் பகுதிக்கும் கூட பயனளிக்கும் என்று அவர் கூறினார்.

“இந்த நடவடிக்கை சிலாங்கூரை தீபகற்ப மலேசியாவின் கிழக்குக் கடற்கரையுடன் இணைக்கும், கிழக்குக் கடற்கரை ரயில் இணைப்புத் திட்டத்தை (ECRL) நிறைவு செய்யும்” என்று அவர் சிலாங்கூர் மாநில சட்டமன்றக் கூட்டத்தில் கூறினார்.

கிள்ளான் முதல் கோலா சிலாங்கூர், தஞ்சோங் காராங் மற்றும் சபாக் பெர்ணம் வரையிலான சிலாங்கூர் ரயில் பாதை இருப்பது நகர்ப்புற மற்றும் கிராமப்புற வளர்ச்சியை சமநிலைப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டது என்று அமிருடின் மேலும் கூறினார்.

பேருந்து சேவைகள் மூலம் இறுதி எல்லை வரையான இணைப்பை வலுப்படுத்துவதுடன், இலகு ரயில் போக்குவரத்து (LRT) அமைப்பை விரிவுபடுத்தும் முயற்சிகளுக்கும் இந்த திட்டம் துணையாக விளங்கும் என்றார்.

சிலாங்கூர் பட்ஜெட் 2024 இல், மாநில அரசு RM3 மில்லியன் ஒதுக்கீட்டின் மூலம் மாநிலத்தின் மேற்குக் கடற்கரையில் சிலாங்கூர் ரயில் பாதையின் சாத்தியக்கூறு பற்றிய ஆய்வை அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

# மாநில சட்டமன்றக் கூட்டத்தில் மகளிருக்கு நற்செய்தி



**கோல சிலாங்கூர்-**
அடுத்த வாரம் கூடவிருக்கும் மாநில சட்டமன்றக் கூட்டத்தில் மகளிருக்கு பல நற்செய்திகள் காத்திருப்பதாக மகளிர் மேம்பாடு மற்றும் சமூக நலத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் அன்ஃபால் சாரி கூறினார்.

சட்டமன்றத்தில் வெளியிடப்படவுள்ள அறிவிப்புகளில் 2024-2026 சிலாங்கூர மகளிர் கொள்கை மற்றும் செயல்திட்டம், யாயாசான் இன்சான் இஸ்திமேவா சிலாங்கூர் உருவாக்கம் ஆகியவையும் அடங்கும் என்று அவர் சொன்னார்.

கடந்த மே 30ஆம் தேதி தொடங்கப்பட்ட 2024-2026 சிலாங்கூர் மகளிர் கொள்கை மற்றும் செயல் திட்டத்தை முழுமைப்படுத்தி சிலாங்கூர் சட்டமன்றத்தில் மீண்டும் தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

நாம் அறிமுகம் செய்யவுள்ள மற்றொருத் திட்டம் யாயாசான் இன்சான் இஸ்திமேவா சிலாங்கூர் அறவாரியம் உருவாக்கமாகும். இந்த அறவாரியத்தை வரும் நவம்பர் மாதம் தொடக்கி வைக்கத் திட்டமிட்டுள்ளோம் என்றார் அவர்.

இந்த திட்டம் இளைஞர்கள் உள்பட மாற்றுத் திறனாளி பிள்ளைகளுக்குப் பயன் தரும். இதற்கான நிதி மாநில அரசிடமிருந்து மட்டுமின்றி பெரு நிறுவனங்களிடமிருந்தும் கிடைப்பதால் இத்திட்டத்தை அமல்படுத்துவதில் கட்டுப்பாடற்ற ஒத்துழைப்பை பெற முடியும் என அவர் குறிப்பிட்டார். இங்குள்ள டி பள்மா ரிசோர்ட்டில் சிலாங்கூர் மாநில வீடமைப்பு மற்றும் சொத்துடைமை நிறுவனம் மற்றும் சிலாங்கூர் மகளிர் திறன் மேம்பாட்டு அமைப்பின் (டபள்யூ. பி.எஸ்.) ஏற்பாட்டில் நடைபெற்ற சொத்து உரிமை சட்ட விழிப்புணர்வு நிகழ்வை முடித்து வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். மாநில சட்டமன்றக் கூட்டத் தொடர் வரும் ஜூலை மாதம் 4 முதல் 18 வரை நடைபெறும் என்று சட்டமன்ற சபாநாயகர் லாவ் வேங் சான் முன்னதாக கூறியிருந்தார்.

# பெண்கள் சொந்த வீடுகளைக் கொண்டிருக்க சிறப்பு இட ஒதுக்கீடு



**கோலா சிலாங்கூர்-**
பெண்கள் சொந்த வீடுகளைக் கொண்டிருக்க உதவும் முயற்சியில் அவர்களுக்கு சிறப்பு இட ஒதுக்கீட்டை வழங்க மாநில அரசு உத்தேசித்துள்ளது.

பெண்களின் வீட்டு உரிமை தொடர்பான கணக்கெடுப்பு செயல்படுத்தப்பட்ட பிறகு, இத்திட்டம் மேற்கொள்ளப்படும் என பெண்கள் மேம்பாட்டு ஆட்சிக்குழு உறுப்பினர் அன்பால் சாரி கூறினார்.

சிலாங்கூர் வீட்டுவசதி மற்றும் ரியல் எஸ்டேட் வாரியம் (LPHS), யுனிவர்சிட்டி உத்தாரா மலேசியா (UUM) மற்றும் வனிதா பெர்டாயா சிலாங்கூர் (WBS) ஆகியவற்றின் கூட்டு முயற்சியின் மூலம் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது.

“இது (சிறப்பு ஒதுக்கீட்டு முன்மொழிவு) மாநில கூட்டத்தொடரில், குறிப்பாக ஒற்றை தாய்மார்கள், ஊனமுற்றோர் மற்றும் முதியோர்களுக்கான வீட்டு உரிமைக்கான சிறப்பு இட ஒதுக்கீடு தொடர்பாக முன்மொழியப்பட்டது.

“ரூமா சிலாங்கூர் கூ போன்ற மலிவு விலை வீட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வீட்டுக் கொள்கையில் சம்பந்தப்பட்ட குழுக்களுக்கு சிறப்பு இட ஒதுக்கீட்டையும் வழங்க முடியும் என்று நான் நம்புகிறேன்,” என்று அவர் செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

பெண்களின் சொத்துரிமை தொடர்பான தரவு இதற்கு முன் இருந்ததில்லை என்றும், சம்பந்தப்பட்ட குழுவிற்கான வீட்டு உரிமைக் கொள்கையுடன் கணக்கெடுப்பு முடிவுகள் பின்பற்றப்படும் என்றும் அன்பால் விளக்கினார்.

சம்பந்தப்பட்ட கணக்கெடுப்பு சிலாங்கூரில் உள்ள மூன்று மண்டலங்களை உள்ளடக்கிய 1,000 நபர்களிடம் நடத்தப்பட்டது மற்றும் ஜூலை இறுதிக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என அவர் கூறினார்.

# பத்தாங் காலி–கெந்திங் சாலை – போக்குவரத்துக்கு திறக்கப்பட்டது

**உலு சிலாங்கூர்-**
பாதர்'ஸ் ஆர்கானிக் ஃபார்ம் பொழுதுபோக்கு முகாம் அருகே சுமார் ஈராண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட தடம் பி66 ஜாலான் பத்தாங் காலி-கெந்திங் சாலை மீண்டும் போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டது.

சுமார் 1 கோடியே 90 லட்சம் வெள்ளி செலவில் இந்த சாலை சீரமைக்கப்பட்டுள்ளதாகக் கூறிய அடிப்படை வசதிகள் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹஷிம், 'தெர்ராலிங்க் வால் சிஸ்டம்' எனும் முறையின் கீழ் இப்பகுதியில் தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இப்பகுதியில் உள்ள 25 மீட்டர் உயர மலைச்சரிவை சீரமைக்க இந்த முறை மிகவும் பொருத்தமானதாக விளங்குவதை பொதுப்பணித்துறை கண்டறிந்-துள்ளதோடு சிலாங்கூரில் முதன் முறையாகப் பயன்படுத்தப்பட்ட திட்டமாகவும் இது விளங்குகிறது என்று அவர் சொன்னார்.

இந்த சாலையின் பிரதானப் பணிகள் முற்றுப் பெற்று போக்குவரத்து நேற்று திறக்கப்பட்டது. இச்சாலை திறக்கப்பட்டதன் வழி சுமார் 10,000 பேர் பயன் பெறுவதற்குரிய வாய்ப்பு கிட்டியுள்ளது. அப்பகுதியில் புற்களைப் பதிக்கும் பணி மட்டுமே இன்னும் பாக்கி உள்ளது. அதுவும் இரண்டு வாரங்களில் முற்றுப் பெற்று விடும் என செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

பாதர்'ஸ் ஆர்கானிக் ஃபார்ம் பகுதியில் கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் தேதி நிகழ்ந்த நிலச்சரிவில் 31 பேர் உயிரிழந்ததோடு மேலும் 61 பேர் உயிர்த்தப்பினர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பத்தாங் காலி-கெந்திங் சாலை போக்குவரத்துக்கு மூடப்பட்டது. அச்சாலை கடந்த ஜனவரி தொடங்கி இலகு ரக வாகனங்களுக்கு திறக்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி முன்னதாகக் கூறியிருந்தார்.

# சிலாங்கூரின் இலட்சிய கனவை நினைவாக்குவதில் 65% வெற்றி

**ஷா ஆலம்-**

முதல் சிலாங்கூர் திட்டத்தில் (RS-1) அடையாளம் காணப்பட்ட 20 முக்கிய திட்டங்களில் பதின்மூன்று ஏற்கனவே செயல்படுத்தும் கட்டத்தில் உள்ளன, இது மாநில வளர்ச்சியின் இலட்சிய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை குறிக்கிறது.

மாநில சட்டமன்றத்தில் RS-1 இடைக்கால மதிப்பாய்வை தாக்கல் செய்யும் போது மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி இதை தெரிவித்தார். அதிக தாக்கத்தை ஏற்படுத்திய திட்டங்களில் சிலாங்கூரில் உள்ள மூன்று பிராந்திய வளர்ச்சித் திட்டங்கள், அதாவது சபாக் பெர்னாம் மேம்பாட்டுப் பகுதி, தெற்கு சிலாங்கூரில் உள்ள ஒருங்கிணைந்த வளர்ச்சி பகுதி மற்றும் சிலாங்கூர் கடல்சார் நுழைவாயில் பொருளாதார வளர்ச்சி மண்டலம்.

ரசாவ் நீர் வழங்கல் திட்டம், ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை மையம் அதன் கழிவு-ஆற்றல் சுத்திகரிப்பு நிலையம், சிலாங்கூர் அரசாங்க தரவு பரிமாற்றம் மற்றும் புலாவ் இண்டா மின்சார நிலையம் ஆகியவை இந்த திட்டங்களில் முக்கியமானது.

மற்ற முக்கிய முயற்சிகளில் ஷா ஆலம் விளையாட்டு வளாக மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இல்திசம் சிலாங்கூர் பென்யாயாங் முயற்சி ஆகியவை அடங்கும்.

“இந்த சாதனை நீண்ட கால, பெரிய அளவிலான வளர்ச்சி திட்டங்களுக்கான கணிப்புகளுடன் ஒத்துப்போகிறது, 2025 ஆம் ஆண்டுக்குள் திட்டமிடப்பட்ட வளர்ச்சியின் அனைத்து கட்டங்களும் ஆகும்,” என்று அவர் கூறினார்

## கருப்பொருள் 1 : பொருளாதார வலுவூட்டல்

| மேக்ரோ காட்டி | இலக்கு | சமீபத்திய நிலை |
| --- | --- | --- |
| கே.டி.என்.கே.யின் ஆண்டுதோறும் வளர்ச்சி | 6.5 – 7.0% (சராசரி 2021-2025) | 8.5% (சராசரி 2021-2022) |
| பயன்மிக்க முக்கிய துறைகளில் முதலீடுகளுக்கு அங்கீகாரம் | RM23–35 பில்லியன் (சராசரி 2021-2025) | RM39.4 பில்லியன் (சராசரி 2021-2023) |
| வேலைகள் | 3.5 – 3.8 மில்லியன் மக்கள் (சராசரி 2021-2025) | 3.7 மில்லியன் மக்கள் (சராசரி 2021-2022) |
| நிலையான அகண்ட அலை சேவை மேம்பாடு | 70% (2025ஆம் ஆண்டுக்குள்) | 61.6% (2023) |

## கருப்பொருள் 2 : சமூக நல்லிணக்கம்

| மேக்ரோ காட்டி | இலக்கு | சமீபத்திய நிலை |
| --- | --- | --- |
| சராசரி குடும்ப வருமானம் | RM9,290 ஒரு மாதம் (2025ஆம் ஆண்டுக்குள்) | RM9,983 ஒரு மாதம் (2022) |
| பரம ஏழ்மை | 0.5% (சராசரி 2025) | 1.5% (2022) |
| வாழ்க்கை தரத்தின் ஒப்பீடு | 11% (2025ஆம் ஆண்டுக்குள்) | 14.2% (2022) |
| சிலாங்கூர் மக்களின் மகிழ்ச்சி குறியீடு | 7.00 (2025ஆம் ஆண்டுக்குள்) | 5.74 (2021) |

## கருப்பொருள் 3 : PEMACUAN KELESTARIAN

| மேக்ரோ காட்டி | இலக்கு | சமீபத்திய நிலை |
| --- | --- | --- |
| ஆண்டு சராசரி PM2.5 அளவுகள் | 15.00 µg/m3 (சராசரி 2021-2025) | 20.38 µg/m3 (சராசரி 2021-2022) |
| நாளின் ஒவ்வொரு மணி நேரமும் சுத்தமான தண்ணீர் | 24 Jam (2021-2025) | 24 Jam (2023) |
| மறுசுழற்சி விகிதம் | 15% (2025ஆம் ஆண்டுக்குள்) | 8.24% (2023) |
| நிரந்தர வன காப்பக கவரேஜ்* | 31% (2025ஆம் ஆண்டுக்குள்) | 31.7% (2023) |

* புதிய காட்டி

## கருப்பொருள் 4 : ஸ்மார்ட் மற்றும் பயனுள்ள நிர்வாகம்

| மேக்ரோ காட்டி | இலக்கு | சமீபத்திய நிலை |
| --- | --- | --- |
| RS 1 ன் பொருளாதார திட்டங்களின் முன்னேற்றம் | 100% (2025ஆம் ஆண்டுக்குள்) | 49% (2023) |
| 95 % தேசிய நிலை ஒப்பீட்டில் நமது ஊராட்சி மன்றங்களின் அடைவு நிலை | 12 PBT (2025ஆம் ஆண்டுக்குள்) | 10 PBT (2023) |
| அரசாங்க சேவையில் டிஜிட்டல் மேம்பாடு | 85% (2025ஆம் ஆண்டுக்குள்) | 82.32% (2023) |
| ஊராட்சி மன்ற சேவைகளில் மக்களின் திருப்த்தி | 85% (2025ஆம் ஆண்டுக்குள்) | 89.84% (2023) |

* புதிய காட்டி

# மக்களுடன் சிலாங்கூர் மாநில சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர்கள்




**டாக்டர் ஃபஹ்மி**
மெஸ்ரா உசியா எமாஸ் வவுச்சர் பெறும் ஸ்ரீ செத்தியா தொகுதி வாக்காளார்

**டத்தோ ரிசாம் இஸ்மாயில்**
சுங்கை ஆயர் தாவார் அதன் தொகுதியில் உள்ள குடியிருப்பாளர்களுக்குப் பள்ளி உபகரணங்களை வழங்கியது





**அன்பால் சாரி**
தாமான் செலாயாங் முத்தியாரா, கோம்பாக்கில் தாமான் டெம்ப்ளர் தொகுதியின் மூலம் உணவுப் கூடை வழங்குதல்

**வோங் சியூ கி**
பழுதடைந்த பள்ளிகளின் உடைமைகளை ஸ்ரீ கெம்பாங்கான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆய்வு





**டாக்டர் குணராஜ்**
செந்தோசா தொகுதி B40 குடும்பத்தை சேர்ந்த மாணவர்களுக்கு அதன் சேவை மையத்தில் மடிக்கணினிகளை வழங்கியது

**வீ.பாப்பாராய்டு**
பந்திங் தொகுதியில் இந்திய அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் மானியம் வழங்கினார்





பள்ளி விளையாட்டு மைதான மேம்பாடு குறித்து விளக்கம் பெறும் கோத்தா கெமுனிங் சட்டமன்ற உறுப்பினர் **எஸ். பிரகாஷ்**

காஜாங் திருமுறை விழாவில் கிள்ளான் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் **வீ. கணபதி ராவ்**





# சொத்து மறு மதிப்பீடு அதன் மதிப்பை உயர்த்தும்

**கோம்பாக்-**

ஊராட்சி மன்றங்கள் தற்போது மேற்கொண்டு வரும் சொத்து மறு மதிப்பீட்டு நடவடிக்கையானது மாநிலத்திலுள்ள சொத்துடைமையாளர்கள் தங்கள் சொத்துகளை நிர்வகிப்பதில் ஒரு வழிகாட்டியாகவும் விளங்கும்.

மிகவும் அவசியமானது எனக் கருதப்படும் இந்த சொத்து மறுமதிப்பீட்டு நடவடிக்கை வரி உயர்வுக்கு வழி வகுத்த போதிலும் குடியிருப்பாளர்களின் சொத்துகளின் மதிப்பையும் உயர்த்தும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இந்த சொத்து மதிப்பீட்டை நாம் மேற்கொள்ளாவிட்டால் உறுதியான மற்றும் செல்லத்தக்க வழிகாட்டியை நாம் பெற இயலாது. இந்த சொத்துகள் பல ஆண்டுகளாக மறு மதிப்பீடு செய்யப்படவில்லை. மதிப்பு உயர்வுக்கு மத்தியிலும் அவர்களின் சொத்துகள் 30 ஆண்டுகளுக்கு முந்தைய மதிப்பை மட்டுமே கொண்டுள்ளன. கொள்முதல், விற்பனை மற்றும் வாடகை என வரும் போது அதன் மதிப்பு துல்லியமானதாக இருப்பதில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் சொத்து மதிப்பீடு துல்லியமான மற்றும் நம்பகமான வழிகாட்டியை வழங்க உதவும். வரி உயர்வு இருக்கலாம் அல்லது இல்லாமல் போகலாம். எனினும், வரி உயர்வை 15 முதல் 20 விழுக்காட்டிற்கு உட்பட்டிருப்பதை உறுதி செய்வதற்கான செயல்முறை வகுத்துள்ளோம் என்றார் அவர்.

இந்த வரி உயர்வு மூலம் பெறப்படும் தொகை, பொது வசதிகளை பராமரிப்பதற்கு ஏற்படும் செலவுகளை ஊராட்சி மன்றங்கள் ஈடுசெய்வதற்கும் மக்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும் என்று அவர் சொன்னார்.

ஊராட்சி மன்றங்கள் வசூலிக்கும் தொகையில் 80 விழுக்காடு குப்பைகளை அகற்றுவதற்கு செலவாகி விடுகிறது. திடல்கள் மற்றும் சமூக மண்டபங்களை அமைப்பதற்கு நிதி இல்லாத சூழல் ஏற்படுகிறது. இருந்த போதிலும் இந்த வரி உயர்வுக்கு எதிரான ஆட்சேபனைகளை செவிமடுக்கும் பணி தொடர்ந்து நடைபெறும் என்று அவர் கூறினார்.




# 13 பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த 130,000 வெள்ளி ஒதுக்கீடு

**ஷா ஆலம்-**

பதிமூன்று பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு 130,000 வெள்ளியை பண்டார் பாரு கிள்ளான் தொகுதி ஒதுக்கீடு செய்துள்ளது.

ஆசிரியர்களும் மாணவர்களும் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை உகந்த சூழலில் மேற்கொள்வதற்கு உரிய வசதிகளை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு பள்ளிக்கும் தலா 10,000 வெள்ளி வழங்கப்படுவதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குவா பெங் ஃபெய் கூறினார்.

இந்த மானியத்தைப் பெறும் பள்ளிகளில் தேசிய தொடக்கப் பள்ளிகள், தேசிய இடைநிலைப் பள்ளிகள், தேசிய மாதிரி சீனப்பள்ளிகள் மற்றும் தேசிய மாதிரி தமிழ்ப்பள்ளி களும் அடங்கும் என்று அவர் சொன்னார்.

பள்ளிகளில் அன்றாட செயல்பாடுகள் சீராக நடைபெறுவதற்கும் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை தரமான முறையில் மேற்கொள்வதற்கும் அடிப்படை வசதிகளை தொடர்ந்தாற்போல் தரம் உயர்த்துவது அவசியமாகும் என்று அவர் தெரிவித்தார்.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஏற்ற சூழலை பள்ளிகளில் உருவாக்கும் நோக்கிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# RM54.11 மில்லியன் மதிப்பீட்டு வரி வசூல்

**கோம்பாக்-**

மே 31 நிலவரப்படி RM54.11 மில்லியன் மதிப்பீட்டு வரியை செலாயாங் நகராண்மை கழகம் (எம்.பி.எஸ்) வசூல் செய்துள்ளது.

அதே காலகட்டத்தில் RM5.25 மில்லியன் மதிப்பீட்டு வரி பாக்கிகளையும் எம்.பி.எஸ் வசூல் செய்துள்ளதாக அதன் தலைவர் கூறினார்.

"தற்போதைய மதிப்பீட்டு வரி வசூல் RM58.5 மில்லியன் அதாவது 92.49 சதவீதத்தை உள்ளடக்கியது. மேலும், நிலுவைத் தொகை RM10.68 மில்லியனிலிருந்து 49.13 சதவீதம் வசூலிக்கப்பட்டது," என்று அவர் மெனாரா எம்.பி.எஸ்யில் நடந்த மாதாந்திர கூட்டத்தில் கூறினார்.

மேலும், RM200 மற்றும் அதற்கு மேல் நிலுவை வைத்திருக்கும் உரிமையாளர்களுக்கு ஏப்ரல் 15 முதல் எம்.பி.எஸ் வாரண்ட்களை செயல்படுத்தி வருவதாக ஷாமான் ஜலாலுடின் மேலும் கூறினார்.

"வாரண்ட் என்பது நோட்டீஸ் (படிவம் E) காலக்கெடு முடிவடைந்ததன் அடையாளமாகும். இதன் மூலம் பாக்கி வைத்திருப்பவர்களுக்கு RM100 அபராதமாக வசூலிக்கப்படுகிறது.

"மே 31 வரை, 25,598 வாரண்டுகள் செயலாக்கப்பட்டு 18,786 அனுப்பப்பட்டுள்ளன," என்று அவர் விளக்கினார்.

இதற்கிடையில், கடந்த மே மாதம் "MYMPS" போர்ட்டல் மூலம் எம்.பி.எஸ் RM568,111.07 வருவாய் ஈட்டியதாக அவர் தெரிவித்தார்.

"கடை வாடகை RM287,515, வணிக உரிமம் RM161,716.47, அபாரதம் RM58,040, கட்டிடம் திட்டமிடல் அனுமதிகள் RM47,642 மற்றும் முன்பணம் RM5,880 ஆகியவற்றிலிருந்து மிகப்பெரிய தொகை வசூலிக்கப்பட்டது.

வணிக உரிமங்கள், கடை வாடகைகள், கட்டிட அனுமதிகள், அபராதங்கள் மற்றும் முன்பணம் ஆகியவற்றை இணைய விண்ணப்பங்கள் மூலம் புதுப்பித்து பணம் செலுத்தும் வணிகர்களின் வசதிக்காக எம்.பி.எஸ் போர்ட்டலை மேம்படுத்தியுள்ளது," என்று அவர் விளக்கினார்.



# சிலாங்கூர் ஆக்கத்திறன் நகர் மாநாட்டை பெட்டாலிங் ஜெயா மாநகரம் நடத்த வாய்ப்பு

**பெட்டாலிங் ஜெயா-**

சிலாங்கூர் ஆக்கத்திறன் நகர் மாநாட்டை ஏற்று நடத்தும் பொறுப்பை மாநில அரசு பெட்டாலிங் ஜெயா மாநகர் மன்றத்திற்கு (எம்.பி.பி.ஜே.) வழங்கியுள்ளது.

எதிர்வரும் 2030ஆம் ஆண்டுவாக்கில் சிலாங்கூரில் ஆக்கத்திறன் நகரை உருவாக்குவதற்கான புளுபிரிண்ட் எனப்படும் பெருந்திட்டத்தை தயாரிப்பது குறித்து விவாதிப்பதை இந்த மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளதாக மாநில அரசின் துணைச் செயலாளர் (மேம்பாடு) டத்தோ ஜோஹாரி அனுவார் கூறினார்.

சிலாங்கூர் கிரியேட்டிவ் சிட்டிஸ் நெட்வேர்க்கை ( சிலாங்கூர் ஆக்கத்திறன் நகர ஒருங்கமைப்பு- எஸ்.சி.சி.என்.) உருவாக்குவதன் மூலம் யு.சி.சி.என். எனப்படும் யுனஸ்கோ கிரியேட்டிவ் சிட்டி அங்கீகாரத்தைப் பெறுவதை இந்த மாநாடு பிரதான இலக்காகக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்தாண்டு வரை உலகம் முழுவதும் 330 நகரங்கள் யு.சி.சி.என். கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றில் சரவா மாநிலத்தின் கூச்சிங் செலாத்தான் நகர் மற்றும் பேராக் மாநிலத்தின் ஈப்போ நகர் ஆகியவையும் அடங்கும் என அவர் குறிப்பிட்டார்.

இங்குள்ள சிவிக் சென்டரில் நடைபெற்ற சிலாங்கூர் ஆக்கத்திறன் நகர் மாநாடு தொடர்பான நிகழ்வில் முக்கிய உரை நிகழ்த்திய போது அவர் இதனைக் கூறினார்.

மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி மன்றங்களும் ஆக்கத்திறன் சார்ந்த சங்கங்கள் மற்றும் அமைப்புகளும் இந்த எஸ்.சி.சி.என். அமைப்பில் இடம் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும் என மாநில அரசு விரும்புவதாக அவர் சொன்னார்.

ஆக்கத் திறன் மற்றும் கலாசாரத் துறையை அடிப்படையாகக் கொண்ட நிலையான நகர மேம்பாட்டை உறுதி செய்வதற்கு ஏதுவாக மாநிலத்திலுள்ள நகரங்களுக்கிடையே ஒத்துழைப்பை வலுப்பெறச் செய்வதில் இந்த எஸ்.சி.சி. என். முக்கிய பங்காற்றும் என்றார் அவர்.

# மதிப்பீட்டு வரி தொடர்பில் 44,029 ஆட்சேபங்கள்



**கோம்பாக்-** உத்தேச மதிப்பீட்டு வரி உயர்வு தொடர்பில் செலாயாங் நகராண்மைக் கழகம் (எம்.பி.எஸ்.) கடந்த மே 31ஆம் தேதி வரை பொது மக்களிடம் இருந்து 44,029 ஆட்சேபங்களை பெற்றுள்ளது.

இந்த ஆட்சேபங்கள் தொடர்பில் பொது மக்களின் கருத்தைக் கேட்டறியும் நிகழ்வு எதிர்வரும் ஜூலை முதல் தேதி தொடங்கி ஆகஸ்டு 30ஆம் தேதி வரை இரு மாதங்களுக்கு நடைபெறும் என்று நகராண்மைக் கழகத் தலைவர் சாஹ்மான் ஜலாலுடின் கூறினார்.

இந்த கருத்துக் கேட்புக் கூட்டம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி வாயிலாக நகராண்மைக் கழகம் தொடர்ந்து தகவல்களை அனுப்பி வருவதாக அவர் சொன்னார்.

கடந்த மே மாதம் 31ஆம் தேதி வரை கிடைத்த ஆட்சேபங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதன் பின்னர் கிடைத்த 1,712 ஆட்சேபங்கள் நிராகரிக்கப்பட்டன என்று இங்குள்ள மெனாரா எம்.பி.எஸ்.சில் நகராண்மைக் கழகக் கூட்டத்திற்கு தலைமையேற்றப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

இந்த ஆட்சேபங்கள் தொடர்பில் விளக்கம் பெற விரும்பும் பொது மக்கள் நகராண்மைக் கழகத்தின் சொத்து மதிப்பீட்டு மற்றும் மேலாண்மைத் துறையை 03-61265905/5906/5907 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

சிலாங்கூர் மாநிலத்திலுள்ள ஊராட்சி மன்றங்கள் 20 முதல் 40 ஆண்டுகளாக மதிப்பீட்டு வரியை மறு ஆய்வு செய்யவில்லை.

காஜாங் நகராண்மைக் கழகம் 39 ஆண்டுகளாக (1985) மதிப்பீட்டு வரியை உயர்த்தவில்லை. கோல லங்காட் நகராண்மைக் கழகம் 37 ஆண்டுகளாகவும் (1987), செலாயாங் நகராண்மைக் கழகம் 32 ஆண்டுகளாகவும் (1989) மதிப்பீட்டு வரியை மறுஆய்வு செய்யவில்லை.

சுபாங் ஜெயா மாநகர் மன்றம், சுபாங் ஜெயா மற்றும் பண்டார் சன்வே ஆகிய இடங்களுக்கான மதிப்பீட்டு வரியை கடந்த 1992ஆம் ஆண்டு முதல் அதிகரிக்கவில்லை. யுஎஸ்ஜே, பூச்சோங், ஸ்ரீ கெம்பாங்கான், மற்றும் செர்டாங் ஆகிய பகுதிகளில் கடந்த 1996 முதல் அதாவது 28 ஆண்டுகளாக வரி உயர்வை அமைல்படுத்தவில்லை.

உலு சிலாங்கூர் நகராண்மைக் கழகம் 28 ஆண்டுகளாகவும் அம்பாங் ஜெயா நகராண்மைக் கழகம் 27 ஆண்டுகளாகவும் ஷா ஆலம் மாநகர் மன்றம் 18 ஆண்டுகளாகவும் வரியை உயர்த்தவில்லை.

இருப்பினும், சொத்து உரிமையாளர்கள் இந்த புதிய மதிப்பீட்டு வரிக்கு தங்களின் ஆட்சேபத்தைத் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட தேதிகளுக்கு முன்பாக சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களிடம் பொது மக்கள் தங்கள் ஆட்சேபத்தை தெரிவிக்கலாம்.

நகரத் திட்டமிடலை ஆக்ககரமான முறையில் மேற்கொள்வதற்கு இந்த மதிப்பீட்டு வரி மறு ஆய்வு மிக முக்கியம் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த மே 30ஆம் தேதி கூறியிருந்தார்.

**SELANGOR INDRU**
Sidang pengarang
**PENASIHAT**
Lembaga Editorial MSSB
**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar
**KETUA PENGARANG**
A.Pakiyanathan
**PENOLONG PENGARANG**
Rajah Ramaya
**ARTIS GRAFIK**
Kathiravan Manoharan
**JURUGAMBAR**
Asri Sapfie,
Raheemie Arifiri,
Hafiz Othman & Fikri Yusof
**Aras 11, Menara Bank**
**Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam.**
*Tel: 03-5523 4856*
*Faks: 03-5523 5856*
*Email: info@mediaselangor.com*




# குடியிருப்பாளர் சங்கங்களுக்கு எம்.பி.பி.ஜே அங்கீகார விருது

**பெட்டாலிங் ஜெயா-** பெட்டாலிங் ஜெயாவை வரும் 2030ஆம் ஆண்டிற்குள் விவேக, நிலையான மற்றும் ஆக்கத்தன்மை கொண்ட நகராக உருவாக்கும் திட்டத்தை வெகு சிறப்பாக அமல்படுத்திய 11 சமூக அமைப்புகளுக்கு பெட்டாலிங் ஜெயா மாநகர் மன்றம் (எம்.பி.பி.ஜே.) விருது வழங்கி கௌரவித்துள்ளது.

சுற்றுச்சூழல் நட்புறவு, பசுமை, அண்டை அயலார் நட்புறவை வளர்த்தல் போன்ற திட்டங்களில் பெட்டாலிங் ஜெயா குடியிருப்பாளர்களின் பங்கேற்பின் அடிப்படையில் இந்த விருதுக்கு தகுதியான அமைப்புகள் மதிப்பீடு செய்யப்பட்டதாக பெட்டாலிங் ஜெயா டத்தோ பண்டார் முகமது ஜாஹ்ரி சமிங்கோன் கூறினார்.

பி.ஜே.எஸ்.எஸ்.ஆர். சமூக தரவுதளத்தின் மூலம் 88 சமூக அமைப்புகள் மதிப்பீடு செய்யப்பட்டு 11 அமைப்புகள் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டன என்று அவர் சொன்னார்.

இந்த மதிப்பீட்டு நடவடிக்கையில் சிறார்கள், இளையோர், பதின்ம வயதினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களின் பங்கேற்பை உட்படுத்திய 17 நீடித்த மேம்பாட்டு இலக்குகளையும் இந்த மதிப்பீடு கவனத்தில் கொண்டது என்றார் அவர்.

இங்கு நடைபெற்ற நிகழ்வொன்றில் பெட்டாலிங் ஜெயா அண்டை அயலார் குழுக்களுக்கு உதவிகளை வழங்கியப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் 2030 பி.ஜே.எஸ்.எஸ்.ஆர். விருதை பிஜேஎஸ் 1 சவுத் அவென்யு குடியிருப்பாளர் சங்கம் தட்டிச் சென்றது. இச்சங்கத்திற்கு 20,000 வெள்ளி ரொக்கப்பரிசும் வெற்றிக் கோப்பையும் வழங்கப்பட்டது.

இரண்டாம் இடத்தைப் பிடித்த கம்போங் துங்கு எஸ்எஸ்1 குடியிருப்பாளர் சங்கம் 15,000 வெள்ளி ரொக்கத்தையும் மூன்றாம் இடத்தைப் பிடித்த டாமன்சாரா டாமாய் குடியிருப்பாளர் மற்றும் வீட்டு உரிமையாளர் சங்கம் 10,000 வெள்ளியையும் பரிசாகப் பெற்றன.

# மேரு சந்தை வளாகத்தில் பொதுத்துறைக்கு ஏற்புடைய ஈகோசிஸ்டம் முறை அமல்

**கிள்ளான்-** மேரு சந்தை வளாகத்தில், பொதுத்துறைக்கு ஏற்புடைய ஈகோசிஸ்டம் முறையை (இகேஎஸ்ஏ) கிள்ளான் மாநகராட்சி (எம்பிடிகே) செயல்படுத்தியது.

பொதுச் சந்தையில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த முறை பொதுமக்களுக்கு வசதியான சூழலில் தேவையான பொருட்களை வாங்க வாய்ப்பளிக்கிறது என்று மேயர் டத்தின் படுகா நோரைனி ரோஸ்லான் கூறினார்.

“எங்களிடம் 5S (Side, Arrange, Sweep, Uniform, Always Charity) என்ற முறை இருந்தது. ஆனால், பணிச்சூழல் மிகவும் ஒழுங்காகவும், பாதுகாப்பாகவும், முறையாகவும் இருக்கும் வகையில் அரசாங்க அலுவலகங்களில் நடைமுறையில் இருக்கும் EK-SAக்கு அது மாற்றப்பட்டது.

“இம்முறை, நாங்கள் பொதுச் சந்தைக்கு விரிவுபடுத்துகிறோம். இதனால் இந்த பொது வசதிகளின் உள்கட்டமைப்பை மிகவும் வசதியான சூழலாகவும், ‘பிஎம்டபிள்யூ’ நிலையிலும் மேம்படுத்த முடியும். இது நகர அந்தஸ்துக்கு ஏற்ப ‘சுத்தமான, வசீகரமான மற்றும் நறுமணம்’ கொண்டதாக இருக்கும் என இன்று நடைபெற்ற நிகழ்வில் அவர் கூறினார்.

பொதுமக்களுக்கு சிறந்த தரமான சேவையை வழங்குவதற்கும், உயர் செயல்திறன் கொண்ட பணி கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை ஊக்குவிக்கும் முக்கியமான கூறுகளில் ஒன்று EKSA ஆகும்.

பொதுச் சந்தையில் வர்த்தகர்கள் வணிக பரிவர்த்தனைகளை எளிதாக்க பணமில்லா பரிவர்த்தனை முறைக்கு மாற வேண்டும் என்றும் நோரைனி பரிந்துரைத்தார்.

“வர்த்தகர்கள் புதிய கட்டண முறைகளை ஏற்று கொண்டு தங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும், காரணம் சந்தை நிறுவனங்கள் சமீபத்திய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொடர்ந்து விவேகமாக செயல்பட வேண்டும்,” என்று அவர் கூறினார்.



# ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகத்தை நிராகரிப்பீர்
## இளைஞர் அமைப்புகளுக்கு பிரதமர் வேண்டுகோள்

**ஈப்போ-**

ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் அடக்குமுறையை நிராகரிக்கும்படி இந்நாட்டிலுள்ள அரசு சாரா இயக்கங்கள் (என்.ஜி.ஓ.) மற்றும் இளைஞர் அமைப்புகளை பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கேட்டுக் கொண்டுள்ளார்.

நபிகள் நாயகம் அவர்கள் வலுவான சமய நம்பிக்கை, மற்றும் உயர் நெறிகள் மூலம் ஊழல் மற்றும் அடக்குமுறையை சமூகத்திலிருந்து ஒழித்து நீதியை நிலை நாட்டியதாக அவர் தெரிவித்தார்.

மக்கள் இத்தகைய குணநலன்களைக் கொண்டவர்களாகவும் ஹிஜ்ராவின் (புலம் பெயர்தல்) உண்மையான பொருளை உணர்ந்தவர்களாகவும் தங்கள் கௌரவத்தை உயர்த்த உறக்கத்திலிருந்து விழித்துக் கொள்பவர்களாகவும் இருந்தால் நாடு முன்னேற்றத்தை நோக்கிச் செல்ல முடியும் என்று அவர் சொன்னார்.

ஹிஜ்ரா என்பது காலத்திற்கு ஒவ்வாத நடைமுறைகள், அநீதியான, அடக்குமுறை மற்றும் அவதூறான செயல்களைத் துடைத்தொழிப்பதைக் குறிக்கிறது. இவ்வாறு செய்வதன் மூலம் மட்டுமே நாம் மாற முடியும். நாட்டையும் மக்களையும் காப்பாற்றக் கூடிய இந்த உணர்வுகளை லீமா ஜெனராசி மலேசியா (பி.எல்.ஜி.) அமைப்பு கொண்டிருக்கும் என நான் நம்புகிறேன் என்று அவர் குறிப்பிட்டார்.

நான் பழைய தலைமுறைக்குச் சொந்தமானவனாக இருக்கிறேன். ஆனால், நமது உரிமைகள் மற்றும் இறையாண்மையைக் காப்பதாக இருந்தால் எதைப் பற்றியும் கவலைப்பட மாட்டேன். உங்களால் முடிந்த அளவுக்கு என்னை இழிவுபடுத்தலாம், மட்டந்தட்டலாம், என்னை சிறையில் அடைக்கலாம். ஆனால் நான் பொங்கியெழுந்து போராட்டம் நடத்துவேன் என்றார் அவர்.

இங்கு நடைபெற்ற பி.எல்.ஜி. அமைப்பின் தொடக்க நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். இந்த நிகழ்வில் பேராக் மந்திரி புசார் டத்தோஸ்ரீ சாரானி முகமது, இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை துணையமைச்சர் ஆடாம் அட்லி அப்துல் ஹலிம் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# டீசல் மானியம் பெற – சரக்கு வாகனப் பட்டியலை விரிவாக்க அரசு பரிசீலனை

**ஷா ஆலம்-**

டீசல் மானியம் பெற தகுதியான பட்டியலில் உள்ள சரக்கு போக்குவரத்து வாகனப் பிரிவுகளை விரிவுபடுத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருவதாக உள்நாட்டு வர்த்தகம் மற்றும் வாழ்க்கைச் செலவின அமைச்சர் தெரிவித்தார்.

இதுவரை 33 வகையான தரை மற்றும் சரக்கு போக்குவரத்து வாகனங்கள் மானிய டீசல் கட்டுப்பாட்டு அமைப்பின் (எஸ்.கே.டி.எஸ்.) கீழ் மானியம் பெற்றுள்ளதாக அதன் அமைச்சர் டத்தோ ஆர்மிசான் முகமது அலி கூறினார்.

இந்த மானியத் திட்டம் தொடர்பாக எந்தவொரு பரிந்துரையையும் ஏற்கத் தாம் தயாராக இருப்பதாகத் அவர் தெரிவித்தார்.

விவசாயிகள் மற்றும் சிறிய அளவில் செம்பனை பயிரிடுவோர் பயன்படுத்தும் ரோரோ வகை போக்குவரத்து லாரிகளையும் இந்த பரிந்துரை உள்ளடக்கியுள்ளது என்று அவர் கூறினார்.

இதன் தொடர்பில் நாங்கள் தோட்ட மற்றும் மூலப்பொருட்கள் அமைச்சு, விவசாயம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சை அணுகியுள்ளோம். இதன் மூலம் அவர்கள் குறிப்பிட்ட பங்களிப்பாளர்களுடன் கலந்துரையாடல் நடத்த முடியும் என்றார் அவர்.

பொதுவாக பயனீட்டாளர்களின் தினசரி அத்தியாவசியப் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விநியோகச் சங்கிலியுடன் நேரடித் தொடர்புடையத் துறையாக இருந்தால் தணிப்பு மற்றும் தலையீட்டு திட்டத்தை முன்மொழிவது குறித்து அரசாங்கம் பரிசீலிக்கும் என அவர் சொன்னார்.

பிரதமர் (டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம்) அறிவித்தபடி பூடி மடாணி தவிர எங்களிடம் ஒரு ஆலோசனைக் குழு உள்ளது (டீசல் இலக்கு மானியம் தொடர்பாக) என்று நாடாளுமன்றத்தில் இன்று லாருட் உறுப்பினர் டத்தோஸ்ரீ ஹம்சா ஜைனுடினின் கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் தெரிவித்தார்.

தற்போது பொதுப் போக்குவரத்துத் துறையில் உள்ள பள்ளிப் பேருந்துகள், விரைவுப் பேருந்துகள், நின்று செல்லும் பேருந்துகள், டாக்சிகள், ஆம்புலன்ஸ் மற்றும் தீயணைப்பு வண்டிகள் என 10 வகையான போக்குவரத்து வாகனங்கள் டீசல் மானியங்களைப் பெறுகின்றன என அவர் விளக்கினார்.

இவை தவிர, பிரைம் மூவர்ஸ், பொது சரக்கு லோரிகள், விவசாய பொருட்கள், தண்ணீர், மாவு, கால்நடைக் கூண்டுகள், போக்குவரத்து சேவைகள் மற்றும் கழிவு மேலாண்மை, பேருந்துகள் அல்லது பயணி வேன்கள், லோரிகள், பேருந்துகள், உணவு கேட்டரிங் வேன்கள் ஆகியவையும் இலக்கு மானியப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன என்றார் அவர்.

# மனித கடத்தல் அறிக்கையில் – மலேசியாவிற்கு மதிப்பிற்குரிய இரண்டாம் இடம்

**கோலாலம்பூர்,-**



அமெரிக்க வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான மனித கடத்தல் (டிப்) அறிக்கையில் மலேசியா இரண்டாம் தரவரிசைக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளது உள்ளூர் வணிகங்களுக்கு ஒரு ஆசீர்வாதம் என்று உள்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சைபுடின் நசுஷன் இஸ்மாயில் இன்று தெரிவித்தார்.

அடுக்கு 2க்கான நகர்வு முதலீட்டாளர்கள் மற்றும் மலேசியப் பொருட்களை கொள்முதல் மற்றும் சந்தையாளர்களுக்கு லாபமாகும். மலேசியா தனது தொழில்களில் அடிமைத்தனமான கட்டாய உழைப்பு பயன்படுத்துவதில்லை என்பதைக் காட்டுகிறது என்றும் அவர்கள் தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்வதில் கட்டுப்படுத்தப்பட மாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

"உடனடியான தாக்கம் என்னவென்றால், எங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப் பாடுகளின் சாத்தியக்கூறுகள் குறித்து எங்களிடம் தெளிவு உள்ளது. உதாரணமாக, விவசாயத் தொழிலை எடுத்துக் கொள்ளுங்கள், கட்டாய உழைப்பு இருப்பதாக அவர்கள் உணர்ந்தால், தயாரிக்கப் பட்ட பொருட்களுக்கு நல்ல வரவேற்பு கிடைக்காது.

"நாங்கள் அடுக்கு 3 இல் இருந்த போது இது உண்மையாக இருந்தது, எனவே இப்போது அவர்கள் தொழில் துறையிலிருந்து தயாரிக்கப்படும் தயாரிப்புகளை அனுமதிக்க மாட்டார்கள், மேலும் அதிகமான சந்தைகள் எங்களுக்குத் திறக்கப் படலாம்.

"இப்போது அமெரிக்க வெளியுறவுத்துறை இந்த மதிப்பீட்டை அமைக்கும் போது அது நிறுவனங்களுக்கு நல்லது, ஏனெனில் இது அமெரிக்க வெளியுறவுத்துறை நமது முயற்சி களை அங்கீகரித்துள்ளது" என்று ஓய்வு பெற்ற மூத்த போலீஸ் அதிகாரிகள் சங்கம் மலேசியாவின் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

முதலாவது திறன் மேம்பாடு, இரண்டாவது நிறுவனங்களுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்துவது, மூன்றாவது படி சிறந்த அறிக்கை முறைகளை உறுதி செய்வது மற்றும் மலேசியாவின் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளை மேம்படுத்துவதற்கான வழிகள் கண்டறிவது.

மலேசியா கடைசியாக 2017ஆம் ஆண்டு இரண்டாம் நிலையில் இருந்தது. பதிவு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க சாதனைகளில், அதிகரித்த விசாரணைகள், குறிப்பிடத்தக்க தண்டனைகளுடன் கூடிய தண்டனைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் உடந்தையாக இருந்ததாக கூறப்படும் அதிகாரிகள் மீது வழக்குத் தொடருதல் ஆகியவை அடங்கும்.

முந்தைய ஆண்டை காட்டிலும் அதிகமான தொழிலாளர் கடத்தல்காரர்களுக்கு அரசாங்கம் தண்டனை வழங்கியது, பாதிக்கப் பட்ட தங்கும் இடங்களுக்கான நிதியை அதிகரித்தது, மேலும் அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் தங்குமிடங்களில் சேவைகளை பெறும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிக சுதந்திரமான பயணச்சீட்டுகளை வழங்கியது.

# இ.பி.எஃப். நெகிழ்வு கணக்கில் இருந்து 700 கோடி மீட்பு

**கோலாலம்பூர்-**

ஐம்பத்தைந்து வயதுக்கும் கீழ்ப்பட்ட ஊழியர் சேம நிதி சந்தாதாரர்களில் 34 லட்சத்து 50 ஆயிரம் பேர் அல்லது 26.6 விழுக்காட்டினர் இம்மாதம் 10ஆம் தேதி வரையிலான காலக்கட்டத்தில் தங்கள் சேமிப்பிலிருந்து 1,086 கோடி வெள்ளியை செஜாத்ரா கணக்கிலிருந்து (இரண்டாவது கணக்கு) நெகிழ்வு கணக்கிற்கு (மூன்றாவது கணக்கு) மாற்றியுள்ளனர்.

அவர்களில் 29 லட்சத்து 30 ஆயிரம் பேர் நெகிழ்வு கணக்கில் சேர்க்கப்பட்ட தொகையிலிருந்து சராசரி தலா 2,382 வெள்ளி வீதம் மொத்தம் 698 கோடி வெள்ளியை மீட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் வழங்கப்பட்ட எழுத்துப்பூர்வப் பதிலில் கூறப்பட்டது.

சேமிப்புக் கணக்கு மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் இ.பி.எஃப். சந்தாதாரர்கள் மீட்டுள்ள பணம் தொடர்பான தரவுகள் குறித்து பெக்கான் தொகுதி உறுப்பினர் டத்தோஸ்ரீ ஷ் முகமது புஸி ஷ் அலி எழுப்பியக் கேள்விக்கு நிதியமைச்சு இந்த பதிலை வழங்கியுள்ளது.

உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட இந்த பணம் தற்போதைய நிதி கையிருப்பு, பங்களிப்பின் மூலம் பெறப்படும் நிகர ரொக்க பணப்புழக்கம், முதிர்வு மற்றும் முதலீட்டு வருமானம் மூலம் ஈடுகட்டப்படும் என்று அமைச்சு தெரிவித்தது.

மேலும், 482 கோடி வெள்ளி உறுப்பினர்களின் ஓய்வு கால கணக்கிற்கு மாற்றப்பட்டதன் வாயிலாக 39,000 உறுப்பினர்களின் அடிப்படை சேமிப்பு 240,000 வெள்ளியாக உயர்ந்துள்ளது என்றும் அது குறிப்பிட்டது.



# தொகுதி மக்களிடம் மனம் திறந்த பிரதமர்

பிரதமர் தம்புன் தொகுதியில் இந்தியர்களுடன் ஒரு நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் மடாணி அரசு, இந்தியர்கள் மட்டுமின்றி அனைவரின் கோரிக்கைகளுக்கும் செவிசாய்த்து வருவதாகவும் மக்களின் கோரிக்கைகள் கனிவாக, அதே வேளையில் படிப்படியாக தீர்வு கண்டு வருவதாக கூறினார்.

தங்கள் உறவினர் மற்றும் வேண்டியவர்களின் நல் வாழ்விற்கு நாட்டை சுரண்டிய கடந்த கால தலைவர்களின் செயலால் நாடு பல சீரழிவுகளில் சிக்கி நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டாலும், அதனையே காரணமாக கூறி ஜாலம் காட்டாமல் மக்களின் தேவைகளை தீர்க்கவும், மக்கள் எதிர்கால சவால்களை சமாளிக்கவும் மடாணி அரசு கடுமையாக உழைத்து வருகிறது என்றார் பிரதமர்.

இருப்பினும், அரசாங்கத்தின் முன் முயற்சிகளை நடைமுறைப் படுத்துவதில் ஏற்படும் சில சிறிய பலவீனங்களை மிகைபடுத்தி அரசாங்கத்தை விமர்சித்து பொறுப்பற்ற முறையில் செயற்பட்ட சில சமூகத் தலைவர்களையும் கண்டிப்பதாகவும், சமூகத்தின் தலைவர்கள் அடிமட்ட அளவில் எந்த ஒரு விஷயத்தையும் அரசின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய சமூக உருமாற்றுப் பிரிவுக்கு (மித்ரா) 100 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கப்பட்ட நிலையில், கடந்த காலத்தில் ஒதுக்கப்பட்ட மானியத்தை அரசிடம் திரும்ப ஒப்படைத்தவர்களும், அதை சூரையாடியவர்களும் அரசாங்கத்தின் செயல்திறன் பற்றி நீலிக்கண்ணீர் சிந்துகின்றனர், இந்தியர்களின் நலன் புறக்கணிக்கப்படுவதாக கூறப்படும் கூற்றையும் நான் மறுக்கிறேன். மித்ராவுக்கு 2023 ம் ஆண்டில் செய்த ஒதுக்கீடு மட்டுமே 100 விழுக்காடு சமுதாயத்திற்கு திருப்பிவிடப் பட்டுள்ளது.

# அரசு இயந்திரங்களைப் பயன்படுத்தும் அமைச்சர்கள் மீது நடவடிக்கை

**கோலாலம்பூர்-**
தேர்தல் பிரசாரத்தின் போது அமைச்சர்கள் அல்லது அரசு துறைகள் அரசாங்க இயந்திரங்களைப் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் எச்சரித்துள்ளார்.

வேட்புமனு தாக்கல் முடிந்தவுடன் அமைச்சர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் அரசு துறைகள் அரசாங்கம் இயந்திரங்கள் பயன்படுத்தக்கூடாது என்பது அமைச்சரவையின் முடிவாகும் என்று நிதியமைச்சருமான அவர் சொன்னார். காரணம், ஊழலை ஒழிக்கும் நமது கோட்பாட்டின் ஒரு பகுதியாக இது விளங்குகிறது. ஊழல்கலாசாரம் தொடரக்கூடாது என நாம் விரும்புகிறோம்.

இந்த விதிகள் மீறப் பட்டால் அமைச்சரவையின் உத்தரவு மீறப் பட்டதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு எதிராக அமைச்சரவை நடவடிக்கை எடுக்கும் என்று மக்களவையில் அமைச்சர் கேள்வி நேரத்தின் போது அவர் தெரிவித்தார்.

## உயர்கல்விக் கூடங்களுக்கும் மடாணி சிந்தனையாளர் திட்டம்

**கோலாலம்பூர்-**
மாரா தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் (யு.ஐ.டி.எம்.) மேற்கொள்ளப்பட்டு வரும் தலைமைத்துவ மடாணி சிந்தனையாளர் திட்டம் மேலும் அதிகமான உயர்கல்விக் கூடங்களுக்கு விரிவுபடுத்தப்படும் என்று உயர்கல்வி அமைச்சர் டத்தோஸ்ரீ ஜம்ரி அப்துல் காடீர் கூறினார். தனது பேஸ்புக் பக்கத்தில் அவர் இந்த அறிவிப்பை நேற்றிரவு வெளியிட்டார்.

தேசிய மேம்பாட்டிற்கான இலக்கை மெருகூட்டுவதில் உயர்கல்விக்கூட தலைவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் இளம் தலைவர்கள் ஒன்றிணைவதை உறுதி செய்யும் நோக்கில் இந்த திட்டம் அமல்படுத்தப்படுவதாக அவர் சொன்னார்.

யு.ஐ.டி.எம். ஒத்துழைப்புடன் மலேசிய தேசியக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இரு நாள் திட்டத்தில் நாடு முழுவதும் உள்ள யு.ஐ.டி.எம். உயர்தலைமைத்துவத்தைச் சேர்ந்த 74 பேர் பங்கேற்றதாக அவர் சொன்னார்.

மடாணி மலேசியா நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவும் ருக்குன் நெகாரா கோட்பாட்டை போற்றும் வகையிலும் கல்விக்கழகங்களின் இலக்கை வலுப்படுத்தும் நோக்கில் இந்த திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய துரித வளர்ச்சிக்கு ஏற்ப யு.ஐ.டி.எம்.மும் விரைந்து முன்னோக்கிச் செல்ல வேண்டும் என அவர் அந்த பதிவில் வலியுறுத்தினார்.

அரசாங்க உயர்கல்விக் கூடங்கள் நிர்வாகத்தை மட்டும் முழுமையாக சார்ந்திருக்கும் என்ற கடந்த கால வரலாற்றை யு.ஐ.டி.எம். இனியும் தொடரக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

## மலேசிய ஏர்போர்ட் ஹோல்டிங்ஸ் வெளிநாட்டு நிறுவனத்திற்கு விற்கப்படவில்லை

**ஷா ஆலம்-**
மலேசியா ஏர்போர்ட் ஹோல்டிங்ஸ் பெர்ஹாட் (MAHB) ஒரு வெளிநாட்டு நிறுவனத்திற்கு விற்கப்படவில்லை என்றும், அதன் உரிமையாளராக அரசாங்கமே இருக்கும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

கசானா நேஷனல் பெர்ஹாட் (கஜானா) மற்றும் தொழிலாளர் சேம நிதி சந்தா வாரியம் (KWSP) ஆகியோரின் பங்குகளில் கூட முக்கிய மாற்றமில்லை, அவை இரண்டும், Khazanah மற்றும் EPF இன் உரிமை 41 சதவீதத்தில் இருந்து 70 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது வெளியில் உலாவும் கதைகளுடன் முரண்படுகிறது. எந்த வெளிநாட்டு நிறுவனத்திற்கும் MAHB விற்பனை செய்யப்படவில்லை என்று டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

அபுதாபி முதலீட்டு ஆணையம் (ADIA) மற்றும் உலகளாவிய உள்கட்டமைப்பு பங்காளிகள் (ஜிஐபி) போன்ற வெளிநாட்டு நிறுவனங்கள் சுமார் 30 சதவீதப் பங்குகளை வைத்துள்ளன," என்று அவர் கூறினார்.

டேவான் ராக்யாட்டில் மலேசிய ஏர்போர்ட் ஹோல்டிங்ஸ் பங்குகளை உலகளாவிய உள்கட்டமைப்பு பங்காளிகள் (ஜிஐபி) விற்பனை செய்வது குறித்து அரசு தொடர்பான முதலீட்டு நிறுவனங்களின் கூட்டமைப்பின் முடிவு குறித்து டத்தோ முகமட் ஷஹர் அப்துல்லாவின் (பினன்-பயா பெசார்) கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

பிரதமரும், நிதி அமைச்சருமான டத்தோ ஸ்ரீ அன்வாரின் பதில் படி, ஆஸ்திரேலியாவின் சிட்னி விமான நிலையம் மற்றும் இங்கிலாந்தின் கேட்விக் விமான நிலையத்தின் ஒத்துழைப்பு மூலம் GIP உடனான EPF பேச்சுவார்த்தைகள் 2012 முதல் நடந்து வருகிறது.

"அரசாங்கத்தின் பொறுப்பு பாதுகாப்பு, நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி (CEO) இன்னும் மலேசியர்கள், அதன் முக்கிய தகுதித் தேவைகள். தலைவர் மலேசியராக இருக்க வேண்டும், தலைமை நிர்வாக அதிகாரி மலேசியராக இருக்க வேண்டும், ஒட்டுமொத்தமாக மலேசிய ஏர்போர்ட் பாதுகாப்பு மலேசிய அரசாங்கத்தின் பொறுப்பாகும்" என்று அவர் கூறினார்.

மே 15 அன்று, கேட்வே டெவலப்மென்ட் அலையன்ஸ் (GDA) மற்றும் அதன் பங்குதாரர்களிடம் உள்ள அனைத்து மலேசிய ஏர்போர்ட் ஹோல்டிங்ஸ் பங்குகளையும் அது கூட்டமைப்பிற்கு அப்பால் உள்ள உரிமைகளையும், ஒரு பங்கிற்கு RM11 என்ற சலுகை விலையில் RM18.4 க்கு பில்லியனுக்கு சமமான விலை கொடுக்க தன்னார்வமாக முன் வந்ததை அறிவித்தனர்.

## பொருளாதார வளர்ச்சிக்கு மீண்டும் புத்துயிரளிப்பதில் முன்னுரிமை

**கோலாலம்பூர்-**
பொருளாதாரத்திற்கு மீண்டும் புத்துயிரளிக்கும் முயற்சிகளுக்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகிறது. நாட்டின் பொருளாதாரத்தின் அளவை விரிவாக்கும் அதே வேளையில் அதனை சரியான தடத்திற்கு மீண்டும் கொண்டு வரும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

ஆசியாவின் பொருளாதார முன்னோடியாக ஆகும் மடாணி பொருளாதார நோக்கத்திற்கேற்ப உயர் வருமானம் கொண்ட நாடாக மலேசியாவை மாற்றும் முயற்சிகளை விரைவுபடுத்த பொருளாதார கட்டமைப்பில் சீர்திருத்தங்கள் முமுமுரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அவர் சொன்னார்.


அடுத்த பத்தாண்டுகளில் நாட்டின் வளர்ச்சி ஆண்டுக்கு 5.0 முதல் 6.00 விழுக்காடாக இருந்தால் மட்டுமே இது சாத்தியாகும் என அவர் சொன்னார். மக்களவையில் நேற்று வழங்கிய எழுத்துப்பூர்வ பதிலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மடாணி பொருளாதார கோட்பாட்டில் அடங்கியுள்ள ஏழு அம்சங்களில் ஒன்றாக விளங்கும் உலகின் 30 முன்னணி பொருளாதார நாடுகளில் பட்டியலில் மலேசியாவை இணைக்கும் அரசாங்கத்தின் திட்டம் மீதான விரிவான விளக்கம் குறித்து பாச்சோக் தொகுதி பெரிக்கத்தான் உறுப்பினர் முகமது ஷியாஹிர் சே சுலைமான் எழுப்பிய கேள்விக்கு அளித்த பதிலில் பிரதமர் இவ்வாறு கூறினார்.

பன்னிரண்டாவது மலேசியத் திட்ட மத்திய கால ஆய்வறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள முன்னெடுப்புகள், தேசிய எரிசக்தி மாற்ற எதிர்கால இலக்கு, 2030 புதிய தொழில்துறை பெருந்திட்டம் மற்றும் 2024 வரவு செலவுத் திட்டம் ஆகியவை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியாக விளங்கும் என அவர் குறிப்பிட்டார்.

தரமான மற்றும் தொழில்நுட்பத்தை அடிப்படையாக க் கொண்ட முதலீடுகளை ஈர்ப்பதில் அதிக முன்னுரிமை அளிக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆசிரியர்கள் முன்கூட்டியே ஓய்வு பெறுவதைத் தடுக்க கல்வியமைச்சு நடவடிக்கை



**நிபோங் திபால்-** ஆசிரியர்கள் மத்தியில் தன்முனைப்பை அதிகரிக்கவும் அவர்கள் முன்கூட்டியே ஓய்வு பெறுவதைத் தடுக்கவும் கல்வியமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அவர்களை உற்சாகப்படுத்த பல்வேறு செயல்முறைகளை அமல்படுத்துவதோடு பதவி உயர்வு தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறோம் என்று கல்வியமைச்சர் ஃபாட்லினா சீடேக் கூறினார்.

உடல் நலம், ஆசிரியர் தொழிலைத் தொடர்வதில் ஆர்வமின்மை மற்றும் குடும்பப் பிரச்சனை ஆகியவை காரணமாகப் பல ஆசிரியர்கள் முன்கூட்டியே ஓய்வு பெற விரும்புகின்றனர் எனத் தாம் கருதுவதாக அவர் சொன்னார்.

இங்குள் சுங்கை பூரி இரவுச் சந்தையைப் பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். சுங்கைப் பாக்காப் இடைத் தேர்தலுக்கான பக்கத்தான் ஹராப்பான் வேட்பாளர் ஜோஹாரி அரிபினும் அப்போது உடனிருந்தார்.

ஆசிரியர்கள் வருவதும் செல்வதும் இயல்பு என்பதால் அவர்களின் முன்கூட்டியே ஓய்வு பெறும் போக்கு நாட்டின் கல்வி முறையில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் ஃபாட்லினா தெரிவித்தார்.

கல்விச் சேவை ஆணையத்தின் ஒத்துழைப்பின் காரணமாக ஆசிரியர் தொழிலில் 98 விழுக்காட்டு இடங்கள் நிரப்பப்பட்டு விட்டன என்றும் அவர் சொன்னார்.

இவ்விவகாரத்தில் நாம் பல்வேறு அணுகுமுறைகளைக் கொண்டி-ருக்கிறோம். ஆசிரியர் பயிற்சிக் கழகங்களிலிருந்து ஆசிரியர்களைப் பெறுவது, தேவைகேற்ப அவ்வப்போது ஒப்பந்த அடிப்படையில் சேவையைப் பெறுவது ஆகியவை அந்த அணுகுமுறைகளில் அடங்கும் என்றார் அவர்.

முன்கூட்டியே பணி ஓய்வு பெறுவதற்கு ஆசிரியர் தொழிலில் தங்களுக்கு ஆர்வமின்மையே காரணம் என்று பல ஆசிரியர்கள் கடந்த மூன்றாண்டுகளில் கூறியுள்ளனர் என்று அமைச்சர் முன்னதாக நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார்.

அக்காலக்கட்டத்தில் முன்கூட்டியே ஓய்வு பெற்ற 4,300 முதல் 6,300 வரையிலான ஆசிரியர்களில் 72.36 விழுக்காட்டினர் வழங்கிய பதில் இதுவாகத்தான் இருந்தது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

# டீசல் இலக்கு மானியம் - வெ.25 கோடி கசிவு தடுக்கப்பட்டது

**தும்பட்-** கடந்த ஜூன் 10ஆம் தேதி டீசலுக்கான இலக்கு மானியத் திட்டம் அமல்படுத்தப்பட்டதிலிருந்து தீபகற்ப மலேசியா எல்லையில் உள்ள பெட்ரோல் நிலையங்களில் 25 கோடி வெள்ளி மதிப்புள்ள டீசல் கசிவு கடத்தல் அல்லது முறைகேடுகள் தடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது.

டீசல் விற்பனை நாளொன்றுக்கு 23 விழுக்காடு அல்லது 65 லட்சம் லிட்டர் குறைந்துள்ள வேளையில் வணிக ரீதியிலான டீசல் விற்பனை தினசரி 48 லட்சம் லிட்டர் அதிகரித்துள்ளது என்று நிதியமைச்சர் II டத்தோஸ்ரீ அமீர் ஹம்சா அஸிசான் கூறினார்.

பெட்ரோல் நிலையங்களில் மானிய விலை லிட்டருக்கு வெ.2.15 ஆக இருந்தபோது தொழிற்சாலைகள் வணிக ரீதியில் டீசலை லிட்டருக்கு வெ.3.00 என்ற விலையில் வாங்குவதற்குப் பதிலாக பெட்ரோல் நிலையங்களிலிருந்து மானிய டீசலைப் பெற முற்பட்டதாக அவர் விளக்கினார்.

பெங்கலான் குபோரில் உள்ள குடிநுழைவு, சுங்க, தனிமைப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு வளாகத்திற்கு பணி நிமித்த வருகையை மேற்கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது, பெட்ரோல் நிலையங்களில் டீசல் லிட்டருக்கு வெ.3.35 என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் தொழில் துறையினர் வணிக ரீதியில் டீசல் வாங்கத் தொடங்கிவிட்டனர் என அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வட எல்லைக்கு அருகிலுள்ள பெட்ரோல் நிலையங்களும் டீசல் விற்பனையில் 40 முதல் 50 சதவிகிதம் வீழ்ச்சியை சந்தித்துள்ளன. எரிபொருள் கடத்தல்காரர்களுக்கு ஏற்பட்ட லாப குறைவு காரணமாக அண்டை நாடுகளுக்கான எரிபொருள் கடத்தல் நடவடிக்கைகள் குறைவதை இது குறிக்கிறது என்று அவர் மேலும் கூறினார்.

டீசல் கசிவுக்கு எதிராக அரசு நிறுவனங்கள் கடுமையான அமலாக்கத்தைத் தொடரும் எனக் கூறிய அவர், டீசல் முறைகேடு மற்றும் கடத்தலைத் தடுப்பதில் அதிகாரிகளுக்கு உதவுமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட டீசல் மானியங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஆண்டுக்கு 400 கோடி வெள்ளியை மிச்சப்படுத்த முடியும். அதன் மூலம் நீண்ட கால அடிப்படையில் நிதி நிலையை வலுப்படுத்த இயலும் என்றார் அவர்.

# இணைய மோசடியைத் தடுக்க புதிய சட்டங்கள்

**தைப்பிங்-** இணையத் வலைத்தளங்களில் நிகழும் மோசடிகளைத் தடுப்பதற்காக புதிய சட்டத்தை உருவாக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு 2010ஆம் ஆண்டு தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டத்தில் (சட்டம் 709) செய்யப்படவிருக்கும் திருத்தம் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என இலக்கவியல் அமைச்சு உறுதியளித்துள்ளது.

இவ்விரு சட்டங்களும் நுட்ப மற்றும் சட்ட அமலாக்க கோணங்களில் முற்றிலும் மாறுபட்டவை என்று டிஜிட்டல் அமைச்சர் கோபிந்த் சிங் டியோ கூறினார்.

தனிநபர் தரவுகள் பாதுகாப்பாகச் சேமித்து வைக்கப்படுவதை உறுதி செய்வதை சட்டம் 709இல் செய்யப்படும் திருத்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது. தரவு மீறல் அல்லது ஊடுருவல் நிகழ்ந்தால் அது குறித்த முன்னறிவிப்பை சம்பந்தப்பட்ட பங்களிப்பாளர்கள் கட்டாயமாக வழங்குவதை உறுதி செய்வதற்கான சட்ட விதிகளை நாம் உருவாக்க வேண்டியுள்ளது என்று அவர் சொன்னார்.

அதே சமயம், புதிதாக உருவாக்கப்படவுள்ளச் சட்டம் தனிநபர்களைப் பாதிக்கக் கூடிய இணைய மோசடிகளை தடுப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. இது சட்ட ரீதியான கோணத்தில் மாறுபட்டுள்ளதை நாம் காண முடியும் என்று அவர் தெரிவித்தார்.

சட்டம் 709ஐ ஒருங்கிணைக்கும் மற்றும் அமல்படுத்தும் அதிகாரம் டிஜிட்டல் அமைச்சின் கீழ் இருக்கும் எனக் கூறிய அவர், புதிதாக உருவாக்கப்படவுள்ள சட்டம் தொலைத் தொடர்பு அமைச்சு மற்றும் உள்துறை அமைச்சின் ஒத்துழைப்பில் அமலாக்கம் காணும் என்றார் அவர்.

மாறுபட்டச் சட்டங்களைக் கொண்டிருந்தாலும் கிடைக்கும் புகார்கள் மீது நாங்கள் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுப்போம். எந்த புகாரை எந்த அமைச்சு கவனிக்கும் என்பதை நாங்கள் ஆய்வு செய்வோம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மின்னியல் கழிவுகளை கடத்துவோருக்கு ஒரு கோடி வெள்ளி வரை அபராதம்



**கிள்ளான்-** தரை அல்லது நாட்டின் கடல் வழியாக மின்னியல் கழிவுகளை இறக்குமதி செய்வது அல்லது கடத்துவது போன்ற நடவடிக்கையில் ஈடுபடுவோ-ருக்கு அதிகபட்சமாக 1 கோடி வெள்ளி வரை அபராதம் விதிக்கப்படும்.

கடந்த மார்ச் மாதம் மக்களவையில் அங்கீகரிக்கப்பட்ட1974 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தரச் சட்டத் (சட்டம் 127) திருத்தம் மூலம் அபராதத் தொகை 20 மடங்கு அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதாக இயற்கை வள அமைச்சர் நிக் நஸ்மி நிக் அகமது கூறினார்.

இந்தச் சட்டம் வரும் ஜூலை 7 ஆம் தேதி அமல்படுத்தப்படும் எனக் கூறிய அவர், குற்றவாளிகளுக்கு சிறைத்தண்டனை மற்றும் கூடுதல் அபராதம் விதிக்க வகை செய்யும் இச்சட்டம் அரசு பதிவேட்டில் வெளியிடப்படும் என்று சொன்னார்.

இன்றைய அதிரடி சோதனை நடவடிக்கையின் அறிக்கையை அமைச்சரவையின் ஆய்வுக்கு எடுத்துச் செல்வோம். புதிய கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மிகவும் நன்றாக உள்ளன. ஆனால் அவற்றின் அமலாக்கம் குறித்து மேலும் விவாதிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

மின்னியல் கழிவுகளை ஏற்றிய கொள்கலன்கள் நுழையும் விவகாரம் தொடர்பில் மேற்கு துறைமுகத்திற்கு சுற்றுச்சூழல் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் ஜமாலியா ஜமாலுடினுடன் வருகைப் புரிந்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

1974ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தரச் சட்டத்தை (சட்டம் 127) திருத்துவதை நோக்கமாகக் கொண்ட 2023 சுற்றுச்சூழல் தர (திருத்தம்) சட்ட மசோதாவை மக்களவை கடந்த மார்ச் 25ஆம் தேதி நிறைவேற்றியது.

அமலாக்க நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தவும், மாசுபாடு மற்றும் சுற்றுச்சூழல் குற்றங்கள் தொடர்ந்து நிகழாமல் தடுக்கவும், அபராதம் மற்றும் தண்டனையை அதிகரிக்கவும் இந்த சட்டத் திருத்தம் உதவும்.

இதற்கிடையில், கடந்த மார்ச் 21 முதல் ஜூன் 19 வரை மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த நடவடிக்கையில் மின்னியல் கழிவுகளைக் கொண்ட 106 கொள்கலன்கள் கைப்பற்றப்பட்டதாக நிக் நஸ்மி கூறினார்.



# சிலாங்கூர் சார்பில் 704 விளையாட்டாளர்கள் – 213 அதிகாரிகள் பங்கேற்பு

**கோலாலம்பூர்-**
சரவாக் மாநிலத்தில் வரும் ஆகஸ்ட் 17 முதல் 24 வரை நடைபெறும் 2024 மலேசிய விளையாட்டுப் போட்டிகளில் (சுக்மா) மாநிலத்தின் சார்பில் 704 விளையாட்டு வீரர்கள் மற்றும் 213 அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

ஜூலை 5 ஆம் தேதி பதிவு செய்யும் காலக்கெடுவிற்கு முன்னதாக அனைத்து விளையாட்டு வீரர்கள் பயிற்சியாளர்கள் உட்பட அதிகாரிகள் ஈராண்டிற்கு ஒரு முறை நடைபெறும் இந்த விளையாட்டு போட்டிக்கு பட்டியலிடப் பட்டுள்ளதாக சிலாங்கூர் விளையாட்டு மன்றத்தின் நிர்வாக இயக்குனர் முகமட் நிஜாம் மர்ஜுக்கி கூறினார்.

ஆயத்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக விளையாட்டு வீரர்களின் தயார் நிலையை அளவிடுவதற்கு தொடர்ச்சியான நட்பு முறை போட்டிகள் நடத்தப்பட்டு அவர்களின் திறன் சோதிக்கப் படும் என்று அவர் தெரிவித்தார்.

சுக்மா போட்டிக்கு 704 விளையாட்டு வீரர்களின் பட்டியலை சிலாங்கூர் குழு இறுதி செய்துள்ளது. அவர்கள் அனைவரும் இப்போது அணி பயிற்சி மற்றும் தயார் பயிற்சியின் இறுதி கட்டத்தில் உள்ளனர்.

அனைத்து அணிகளும் சரவாக்கிற்குப் புறப்படுவதற்கு முன் இரண்டு வாரங்களுக்கு அந்தந்த விளையாட்டுகளுக்கு ஏற்ப ஓரிட மையை பயிற்சியில் ஈடுபடுவார்கள் என்று அவர் கூறினார் .

ஒன்பது முறை ஒட்டுமொத்த சாம்பியனாக வாகை சூடிய சிலாங்கூர், இந்த முறை 61 தங்கப் பதக்கங்களை வெல்வதை இலக்காகக் கொண்டுள்ளது. நீச்சல், தடகளம், வில்வித்தை, டென்னிஸ் மற்றும் பூப்பந்து ஆகியவை பதக்கங்களை பங்களிக்க எதிர்பார்க்கும் முக்கிய போட்டிகளாக விளங்குகின்றன..

குழு நிலையில் ஆண்களுக்கான கால்பந்து, கைப்பந்து, செப்பாக் தக்ராவ் மற்றும் கூடைப்பந்து ஆகியவை சிலாங்கூருக்கு தங்கப் பதக்கங்களைக் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக நிஜாம் கூறினார்.

சிலாங்கூர், விளையாட்டு வீரர்களின் சீரான அணியைக் கொண்டுள்ளது. மேலும் ஒவ்வொரு விளையாட்டிலும் குறைந்தது ஒரு தங்கப் பதக்கத்தையாவது பெற முடியும் என அவர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

வரும் ஆகஸ்டு 3 ஆம் தேதி அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் ஊக்க மருந்து மற்றும் காயம் மேலாண்மை பற்றிய விளக்கங்கள் வழங்கப்படும் என்றும் அதைத் தொடர்ந்து மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தலைமையில் கொடி வழங்கும் விழாவும் நடைபெறும் என்றும் நிஜாம் கூறினார்.

கடந்த 2022 சுக்மா போட்டியில் சிலாங்கூர் 31 தங்கம், 55 வெள்ளி மற்றும் 44 வெண்கலம் உள்ளிட்ட 130 பதக்கங்களை வென்று ஐந்தாவது இடத்தைப் பிடித்தது.



தேசிய சேவை பயிற்சித் திட்டம்

# அடுத்த ஆண்டு மத்தியில் தொடங்கப்படும்

**ஷா ஆலம்-**
தேசிய சேவைப் பயிற்சித் திட்டம் (பிஎல்கேஎன்) 3.0 புதிய வடிவமைப்புடன் அடுத்த ஆண்டு ஜூன் அல்லது ஜூலையில் தொடங்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நான்காம் படிவ மாணவர்களுக்குப் பள்ளி அளவில் ப்ரீ-பிஎல்கேஎன் அறிமுகப்படுத்தப்படும். 17 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட இளைஞர்களுக்குப் பிறகு அடிப்படை பிஎல்கேஎன் மேம்பட்ட பயிற்சிக் கட்டத்தை மேற்கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும் என டத்தோஸ்ரீ முகமட் காலிட் நோர்டின் கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், அடுத்த ஆண்டு ஜூன் அல்லது ஜூலையில் கல்வி அமைச்சினால் தொடங்கும் ஜெஜ்மடாணி இணை பாடத்திட்ட நடவடிக்கைகளின் போது ப்ரீ-பிஎல்கேஎன் செயல்படுத்தப் படும் என்றார்.

நாடு முழுவதும் உள்ள 13 பிராந்திய இராணுவ முகாம்கள், 20 பொது பல்கலைக்கழகங்கள் மற்றும் பல பாலிடெக்னிக்குகளில் அடிப்படை பயிற்சியை மேற்கொள்ள 17 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

“1,000 பங்கேற்பாளர்கள் இலக்குடன் இரண்டு பிராந்திய முகாம்களை உள்ளடக்கிய அடிப்படை பிஎல்கேஎன் கட்ட முன்னோடித் திட்டம் ஜூன் அல்லது ஜூலை 2025இல் தொடங்கும்.

பிஎல்கேஎன் மறு-அமுலாக்கத்தின் சமீபத்திய நிலையை அறிய விரும்பிய ஜெலி நாடாளுமன்ற உறுப்பினர் ஜஹாரி கெச்சிக்கின் கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

மேலும், கருத்துத் தெரிவித்த முகமட் காலிட், இத்திட்டத்தில் 30 சதவீதம் அடிப்படைக் குடியுரிமைத் தொகுதிகளும், 70 சதவீதம் அடிப்படை இராணுவப் பயிற்சியும் கொண்டிருக்கும் என சட்டமன்றத்தில் நஜ்வான் அறிவித்தார்.



# விளையாட்டு வீரர்களுக்கான கொடுப்பனவு விகிதத்தை

## சிலாங்கூர் அரசாங்கம் மதிப்பாய்வு செய்யும்

**ஷா ஆலம்-**
விளையாட்டு வீரர்கள் மற்ற மாநில அணிகளில் சேர்வது அல்லது அவர்களுக்காக விளையாடுவது போன்றவற்றைச் சமாளிக்க விளையாட்டு வீரர்களுக்கான கொடுப்பனவு கட்டண விகிதத்தை சிலாங்கூர் அரசாங்கம் மதிப்பாய்வு செய்து வருகிறது.

டென்னிஸ், வில்வித்தை மற்றும் கால்பந்து போன்ற தனிநபர் மற்றும் குழு விளையாட்டாளர்களை மற்ற மாநிலங்கள் ஈர்ப்பதை தனது தரப்பு கண்டறிந்ததாக விளையாட்டு ஆட்சிக்குழு உறுப்பினர் முகமட் நஜ்வான் ஹலிமி கூறினார்.

`pancing ' கலாச்சாரம் அல்லது போக்கு சிலாங்கூரில் மட்டுமல்ல, மற்ற மாநிலங்களிலும் நடக்கிறது. அதிக கொடுப்பனவுகளை வழங்குவதன் மூலம் அந்தந்த மாநிலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த விளையாட்டு வீரர்களை ஈர்க்கிறார்கள்

“விளையாட்டு வீரர்களுக்காகப் பெரிய அளவில் செலவழிக்கும் மற்றும் பெரிய பட்ஜெட்டை ஒதுக்கும் மாநிலங்களில் சரவாக், சபா, திரங்கானு மற்றும் ஜோகூர் ஆகியவை அடங்கும். இருப்பினும், சிலாங்கூரில் விளையாட்டு வீரர்களுக்கான கொடுப்பனவுகள் இன்னும் நியாயமானவையாக உள்ளது.

“இருப்பினும், அவர்கள் சிலாங்கூர் மாநிலத்திற்காக விளையாடுவதை உறுதி செய்வதற்காக, விளையாட்டு வீரர்களுக்கான கொடுப்பனவு விகிதத்தை நீண்டகாலமாக மதிப்பீடு செய்துவருகிறோம்,” என இன்று சிலாங்கூர் மாநில சட்டமன்ற அமர்வில் கம்போங் துங்கு சட்டமன்ற உறுப்பினர் லிம் யி வெய்யின் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் சரவாக்கில் நடைபெறவுள்ள சுக்மா விளையாட்டு`pancing ` சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளது என்பதை அவரது தரப்பு ஒப்புக்கொள்வதாக முகமட் நஜ்வான் மேலும் கூறினார்.

“சிலாங்கூர் குழுவும் இதே பிரச்சனையை எதிர்கொள்கிறது, ஆனால் விளையாட்டு வீரர்கள் மாநிலத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதை உறுதிசெய்ய பேச்சுவார்த்தைகள் மற்றும் பிற முறைகள் மூலம் அதை நன்கு கையாள முடியும்,” என்று அவர் கூறினார்.

“கபடி விளையாட்டு இப்போது மலேசியாவில் வளர்ந்து வருகிறது மற்றும் சுக்மாவில் பட்டியலிடப்பட்டுள்ளது. மைதான வசதிகள் குறைவு என்பதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். மேலும், நாங்கள் மற்ற வளாகங்களை வாடகைக்கு எடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

எனவே, கபடி விளையாட்டு சங்கத்துடன் இணைந்து மைதானம் கட்ட நாங்கள் தயாராக உள்ளோம். பொருத்தமான இடம் மற்றும் நிலம் இருந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். வசதியான மைதானம் அமைக்க இடத்தை அடையாளம் காண்போம் என்று செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் ஜி குணராஜ் எழுப்பிய கூடுதல் கேள்விக்குப் அவர் இவ்வாறு பதிலளித்தார்.



# 10 கோடி வெள்ளி மித்ரா நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது

**கோலாலம்பூர்-** கடந்த 2023ஆம் ஆண்டுக்கான மித்ராவின் 10 கோடி வெள்ளி நிதி முழுமையாக பயன்படுத்தப்பட்டது.

மக்களவையில் பத்துகாஜா நாடாளுமன்ற உறுப்பினர் சிவக்குமார் எழுப்பிய கேள்விக்கு வழங்கிய எழுத்துப்பூர்வ பதிலில் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் இதனைக் கூறியுள்ளார்.

இந்திய சமுதாயத்தின் உருமாற்றத்திற்காக அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டும் மித்ராவின் வாயிலாக 10 கோடி வெள்ளியை ஒதுக்கி வருகிறது. அவ்வகையில் கடந்த 2023ஆம் ஆண்டுக்கான நிதி பி40 தரப்பு மக்களுக்கு முழுமையாக பயன்படுத்தப்பட்டது.

கடந்தாண்டு மட்டும் மித்ராவின் வாயிலாக 216 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக 134,247 பேர் இத்திட்டத்தின் வாயிலாக பயன் பெற்றனர்.

இந்திய சமுதாய உருமாற்றத்திற்காக 43 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 21,321 பேர் பயன் பெற்ற இத்திட்டங்களுக்காக 35,278,580.46 ரிங்கிட் பயன்படுத்தப்பட்டது. இந்திய சமூக வணிக, வேலை வாய்ப்பு திட்டங்களுக்காக 113 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

35,034,811.90 வெள்ளி இத்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டது. இதன் வாயிலாக 83,883 பேர் பயன் பெற்றனர்.

இந்திய சமூக நல உருமாற்றத்திற்காக 60 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது. 29,686,607.64 ரிங்கிட் இத்திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டது. இத்திட்டங்களின் வாயிலாக 29,043 பேர் பயன் பெற்றனர்.

இதற்கிடையில், இவ்வாண்டு ஜூன் வரை 40 மில்லியன் ரிங்கிட் மதிப்புள்ள நான்கு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டங்களின் வாயிலாக 15,300 பேர் பயன் பெறுவார்கள் என இலக்கிடப்பட்டுள்ளது. அத்திட்டங்கள் அனைத்தும் விரைவில் அமலுக்கு வரும் என்று பிரதமர் கூறினார்.

இதனிடையே மித்ராவின் முன்னாள் சிறப்பு பணிக் குழுத் தலைவர் டத்தோ ரமணன் ராமகிருஷ்ணன் தலைமையில் 2023ஆம் மேற்கொள்ளப்பட்ட முக்கிய 12 திட்டங்கள் பின்வருமாறு:-

**1.** அரசு, தனியார் பல்கலைக்கழகங்களில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் 10 ஆயிரம் இந்திய மாணவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரிங்கிட் வீதம் (ஒரு முறை) மொத்தம் 20 மில்லியன் ரிங்கிட் வழங்கப்பட்டது.

**2.** தனியார் தமிழ் பாலர் பள்ளிகளில் பயின்ற 4500 மாணவர்களுக்கு 200 ரிங்கிட் வீதம் மொத்தம் 11 மில்லியன் வழங்கப்பட்டது.

**3.** சிறுநீரக சுத்திகரிப்பு சிகிச்சைக்கு தனிநபருக்கு 9,600 ரிங்கிட் வீதம் மொத்தம் 8.3 மில்லியன் ரிங்கிட் வழங்கப்பட்டது.

**4.** கூட்டரசுப் பிரதேசத்தில் வரிய நிலையைச் சேர்ந்த 1845 இந்திய குடும்பங்களுக்கு மொத்தம் 8.3 மில்லியன் ரிங்கிட் வழங்கப்பட்டது.

**5.** இந்தியர்கள் அதிகம் வசிக்கும் 72 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு தலா 1 லட்சம் ரிங்கிட் வீதம் மொத்தம் 7.2 மில்லியன் ரிங்கிட் வழங்கப்பட்டது.

**6.** விமான பராமரிப்பு லைசென்ஸ் பயிற்சியில் பங்கேற்ற 100 இந்திய இளைஞர்களுக்கு 6 மில்லியன் ரிங்கிட் வழங்கப்பட்டது.

**7.** 525 தமிழ்ப்பள்ளிகளுக்கு 3 மில்லியன் ரிங்கிட் மதிப்புள்ள 6 ஆயிரம் புதுபிக்கப்பட்ட மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.

**8.** மின்சார வாகன பராமரிப்பு பயிற்சியில் பங்கேற்ற 250 இந்திய மாணவர்களுக்கு 2.9 மில்லியன் ரிங்கிட் வழங்கப்பட்டது.

**9.** 375 சிறு, குறு, நடுத்தர இந்திய வியபாரிகளுக்கு 2 மில்லியன் ரிங்கிட் மதிப்பிலான வியாபார உபரிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**10.** டுரோன் பயிற்சித் திட்டத்திற்கான 150 இந்திய இளைஞர்களுக்கு 1.5 மில்லியன் ரிங்கிட் பயன்படுத்தப்பட்டது.

**11.** நாடு முழுவதும் உள்ள தமிழ்ப்பள்ளிகளுக்கு அறிவியல் தொழில்நுட்ப மாதாந்திர இதழ் வழங்கும் திட்டத்திற்கு 7 லட்சம் ரிங்கிட் வழங்கப்பட்டது.

**12.** இந்திய சமூக உருமாற்ற திட்டங்களை மேற்கொள்ளும் அரசு சாரா இயக்கங்களுக்கு 29.2 மில்லியன் மானியம் வழங்கப்பட்டது.

# நிர்வாகத்தை பலப்படுத்த எச்.ஆர்.டி.கோர்ப். பயன்படுத்த வேண்டும்



**கோலாலம்பூர்-** பொதுக் கணக்காய்வுக் குழுவின் (பி.ஏ.சி.) தணிக்கை முடிவுகளை கவனத்தில் கொண்டு மனிதவள மேம்பாட்டுக் கழகம் (எச்.ஆர்.டி. கோர்ப்.) தனது நிதி மேலாண்மையை வலுப்படுத்த வேண்டும் என்று மலேசிய முதலாளிகள் கூட்டமைப்பின் (எம்.இ.எஃப்.) தலைவர் டத்தோ சைட் ஹுசேன் சைட் ஹுஸ்மான் வலியுறுத்தியுள்ளார்.

இந்த தணிக்கை முடிவுகள் எச்.ஆர்.டி. கோர்ப். அமைப்பின் நிதி நிர்வாகத்தை வலுப்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம். மேலாண்மை, தொழில்நுட்பம் மற்றும் செயல்முறைகளில் சிறந்த தரமான நபர்கள் நமக்குத் தேவை என்று அவர் பெர்னாமாவிடம் கூறினார்.

சந்தேகத்திற்குரிய சொத்துடைமை ஒப்பந்தங்கள் மற்றும் அதிக ஆபத்துள்ள முதலீடுகள் காரணமாக எச்.ஆர்.டி. கோர்ப். நிர்வாகத்தில் பலவீனங்கள் இருப்பதாக பி.ஏ.சி.யின் தணிக்கை முடிவுகள் காட்டுவது குறித்து ஹுசேன் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அந்த அமைப்பின் முதலீட்டுக் குழுவில் பேங்க் நெகாரா பிரதிநிதி இல்லை எனக் கூறிய பி.ஏ.சி., இது 2001ஆம் ஆண்டு மனிதவள மேம்பாட்டு நிதிச் சட்டத்திற்கு எதிரானது எனக் குறிப்பிட்டது.

நிதி பெருக்கம் கண்டு வருவதால் அந்த அமைப்பின் குழுவில் முதலீடு தொடர்பான துறையில் திறமையான நபர்கள் தேவை என்று ஹுசேன் கூறினார். முதலீட்டுக் குழுவை எச்.ஆர்.டி. கோர்ப். அமைக்க சட்டம் அனுமதிக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.எல்.ஓ. (அனைத்துலக தொழிலாளர் அமைப்பு) உறுப்பினர் என்ற முறையில், இத்தகைய நிதியை நிறுவிய எந்த நாட்டையும் நாங்கள் இதுவரை காணவில்லை. திறன் மேம்பாட்டில் வளர்ச்சியில் மலேசியா முன்னணியில் உள்ளதை இது நிரூபிக்கிறது.

எனவே, எச்.ஆர்.டி. கார்ப்பரேஷன் மட்டுமே மனித வள மேம்பாட்டிற்கு ஒரு முன்மாதிரியாக இருக்க முடியும் என்று அவர் கூறினார்.

பி.ஏ.சி.யின் கணக்குத் தணிக்கையைத் தொடர்ந்து மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் விசாரணை தொடங்கிய போதிலும் 2/2024 பி.ஏ.சி. அறிக்கையில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள படி நிலையான நிதி நிலையை அடைவதற்கு அந்த அமைப்புக்கு கடன் வழங்கப்பட வேண்டும் என்றும் ஹுசேன் குறிப்பிட்டார்.

கடந்த 2022 டிசம்பர் 31 வரை எச்.ஆர்.டி. கோர்ப். 38 கோடியே 99 லட்சத்து 50 ஆயிரம் வெள்ளி ஒட்டுமொத்த லாபத்தைப் பதிவு செய்துள்ளது.

# இந்தியா செல்லும் மலேசியர்களுக்கு 30 நாள் கட்டணமில்லா விசா

**கோலாலம்பூர்-** மலேசியர்கள், இ-சுற்றுலா விசாவின் மூலம் 30 நாட்களில் இருமுறை இந்தியாவிற்கு சென்று வருவதற்கான புதிய பயணச் சலுகையை இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் ஜூலை 1-ஆம் தேதி தொடங்கி அடுத்தாண்டு ஜூன் 30-ஆம் தேதி வரை ஓராண்டிற்கு இந்தச் சலுகை அமலில் இருக்கும் என்றும் அது குறிப்பிட்டது.

இ-சுற்றுலா விசாக்கள் மற்றும் பிற இ-விசாக்களுக்கான தற்போதைய விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

அவுட்சோர்ஸ் எனப்படும் சேவை வழங்குநர் (M/s IVS குளோபல் விசா மையம்) மூலமாகவோ அல்லது தூதரகத்திலிருந்து நேரடியாகவோ பாரம்பரிய காகித விசாக்களை தேர்வு செய்பவர்களுக்கு வழக்கமான விசா கட்டணங்கள் விதிக்கப்படும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

இந்த இ-சுற்றுலா விசாவிற்கு மலேசியர்கள் இந்தியத் தூதரகத்தின் அகப்பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள https://indianvisaonline.gov.in/evisa/tvoa.html என்ற இணையதளம் வழி விண்ணப்பிக்கலாம்.

புதிய விதிமுறைகளை கொண்ட இந்தியாவுக்கான இ-சுற்றுலா விசாவிற்கு கூடுதல் விசா கட்டணம் எதுவும் விதிக்கப்படாது என்பதையும் இந்திய தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் இ-பிசினஸ், இ-கான்பரன்ஸ், இ-மெடிக்கல், இ-மெடிக்கல் அட்டென்டன்ட், இ-ஆயுஷ், இ-எமர்ஜென்சி எக்ஸ் மற்றும் இதர விண்ணப்பதாரர்கள் பரிந்துரைக்கப்பட்ட படி விசா கட்டணத்தை செலுத்த வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Diterbikan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam, Selangor. Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Seksyen 15, 40200 Shah Alam, Selangor